காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 21 வியாழக்கிழமை 05.08.2021 கதிர் 273

### இது ரகசியம் அல்ல!

சில சமயங்களில் ஊடகக்காரர்களும் ஜோஸியக்காரர்களும் ஒரு வகையினர். இருவரும் தெரிவிக்கும் எதிர்வு கூறல்கள் சில சமயங்களில் பலித்து விடுவதுண்டு. அப்போது கொலரைத் தூக்கி விட்டுக் கொண்டு நிற்பார்கள். பல சமயங்களில் பக்கம்02 »

# ஒரே நாளில் 82 பேர் பரிதாப உயிரிழப்பு; வைத்தியசாலைகளில் பிணக்குவியல்!

## நாள்தோறும் எகிறும் சாவு; சீனாவை விஞ்சியது இலங்கை



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் சாவு எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகின்றது. தெற்கு வைத்தியசாலைகளில் தொற்றாளர்கள் நிரம்பி வழியும் அதேவேளை, சாவடைந்தவர்களும் பிணக்குவியலாகக் காட்சியளிக்கின்றனர். இதனை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. ☞11



## நேற்று மட்டும் 2,543 பேர் தொற்றுடன் அடையாளம்

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 543 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 18 ஆயிரத்து 737 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் ☞2

## தடுப்பூசி அட்டை கட்டாயமக்கப்படும்!



### யாழில் 30 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள் என்கின்றார் மகேசன்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டோர் அனைவரும் கொரோனாத் தடுப்பூசி அட்டை வைத்திருப்பது அவசியம் என்று மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கொரோனா நிலைமைகள் தொடர்பில் மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் ☞11

## ஆசிரியர்கள் திங்களன்று யாழில் வாகனப் பேரணி!




(எஸ்.நிதர்ஷன்,

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்க வலியுறுத்தியும் கொத்தலாவ சட்ட மூலத்தை நீக்கக் கோரியும் எதிர்வரும் திங்கட்கிழமை யாழில் மாபெரும் வாகனப் பேரணியொன்று நடாத்தப்பட ☞11

## அதிபர்கள்,ஆசிரியர்களே! பாடசாலைக்குப் போகாதீர்!

### இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவுறுத்து

(எஸ்.நிதர்ஷன்,

ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு அழைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், எனினும் ஆசிரியர்கள் எவரும் பாடசாலைகளுக்கு செல்லத் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய எந்தவித அவசியமும் இல்லை ☞11

## வயோதிபர் இல்லத்தில் 26 பேருக்கு கொரோனா

பிலியந்தலையிலுள்ள வயோதிபர் இல்லத்தில் வயோதிபர்கள் உள்ளடங்களாக 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனப் பிலியந்தலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி இந்திக்க எல்லாவல தெரிவித்துள்ளார்.

குறித்த இல்லத்தில் ☞2

## நல்லூர் திருவிழா உள்வீதியில்; 100 பேருக்கு மட்டுமே அனுமதி

### யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்,
இ.கலையமுதன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் உட்பிராகரத்தில் 100 பேருடன் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள ஆலயங்களுக்கான சுகாதார வழிகாட்டலின்படி 100 பேருடன் ☞11

## யாழில் சட்ட விரோத விளம்பரப் பலகை அமைக்கும் முயற்சி பற்றி ஆராய விசேட கூட்டம் கூட்டமுடியாது

### உறுப்பினர்களின் கோரிக்கையை நிராகரித்தார் யாழ் மேயர் மணிவண்ணன்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.05

யாழ்ப்பாணம் மாநகர எல்லைப் பகுதியில், சபையிடம் எந்தவொரு அனுமதியும் பெறாமல், சபைக்கு எந்த விதக் கட்டணமும் அறவிடாமல், வீதிகளிற்கு குறுக்கே விளம்பரப் பதாதைகளை இலவசமாக அமைக்க தென்னிலங்கை சிங்களக் கம்பனி ஒன்றிற்கு மாநகர முதல்வர் சத்தம் சந்தடியின்றி, காதோடு காது வைத்த மாதிரி இடமளித்தார் எனக் குற்றம் சுமத்தப்படுவது குறித்து ஆராய்வதற்கு சபையின் விசேட கூட்டததை கூட்டு மாறுசபைஉறுப்பினர்கள் விடுத்த அவசர கோரிக்கை முதல்வர் வீ.மணிவண்ணனால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் ☞2

## கட்டுப்பாட்டை மீறினால் கடுமையான நடவடிக்கை

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை



நாட்டில் நிலவும் கொரோனா நிலைமைகட்டுப்பாட்டைமீறினால் உரிய நேரத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். ☞2

## யாழ்ப்பாணம் போதனா இரத்த வங்கியில் சகல வகை இரத்தத்துக்கும் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலை இரத்த வங்கியில் சகல வகை இரத்தத்துக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது என இரத்த வங்கி அறிவித்துள்ளது.

ஏற்கனவே இரத்தம் வழங்கி நான்கு மாதங்கள் பூர்த்தியானவர்கள், கொரோனாத் தடுப்பூசி போட்டு ஒரு வார காலத்துக்கு மேற்பட்டவர்கள் இரத்தம் வழங்க முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 0772105375 எனும் கையடக்க தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு இரத்த வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவை பலிப்பதில்லை. அப்போதெல்லாம் பம்மிக் கொண்டு, அப்படி ஓர் எதிர்வு கூறலைக் குறிப்பிட்டமையையேநினைவில் இல்லாதவர்கள் போல நடந்து கொள்வர்.

அந்த ரகத்தில் எனக்குக் கொலரைத் தூக்கி விடும் ஒரு சம்பவம்.

கொத்தலாவல பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு ஆளும் தரப்பின் மொட்டுக் கட்சிக் கூட்டணிக்குள்ளேயே எதிர்ப்பு வலுத்து வருகின்றது. அதனால் இவ்வாரம் அந்தச் சட்டமூலத்தை இரண்டாவது வாசிப்புக்கும், வாக்கெடுப்புக்குமாக நாடாளுமன்றத்தில் எடுப்பதை ஆளும் தரப்பு தள்ளிப்போட்டு சமாளிக்கும் என்று என் இந்தப் பந்தியில் குறிப்பிட்டு வந்தேன். அப்படியே ஆகியிருக்கின்றது.

அந்தச் சட்டமூலத்தின் மீது நாளை வெள்ளிக்கிழமை விவாதமும், வாக்கெடுப்பும் நடக்கவிருந்தன. ஆனால், அந்தச் சட்டமூலத்தை சபையில் இப்போதைக்கு சமர்ப்பிக்கப் போவதில்லை என்று அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இந்தச் சட்டமூலம் தொடர்பில் எம்.பிக்களும் மக்களும் தமது கருத்துகளை வெளிப்படுத்த போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டியிருக்கின்றது என்று சமாதானம் வேறு சொன்னார் அவர்.

இது ஆளும் தரப்புக்குள் இருக்கும் பிய்ச்சல் பிடுங்கலை வெளிப்படுத்தும் ஒரு ஸாம்பிள் மட்டும்தான்.

இப்போது நாட்டில் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகியிருப்பது உர இறக்குமதிக்கான தடைதான். அநத விடயத்திலும் அரசுக்குள் இழுபறி.

இது விடயத்தில் அண்ணன் – தம்பி 'லடாய்' இருக்குமோ என்று ஒரு சந்தேகம் உண்டு. உர இறக்குமதிக்கான தடைக்கு எதிராக விவசாயிகளும், பிற தரப்புகளும் கெம்பிக் கொண்டு நிற்பது தெரிந்த விடயம்தான். ஆனால் அந்தத் தடையில் ஜனாதிபதி கோட்டாபய மிக மிக உறுதியாக இருக்கின்றார் என்று கூறப்பட்டது.

இந்நிலையில், உர இறக்குமதித் தடை தளர்த்தப்படுவது குறித்துத் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்படுவதாக புதிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தரப்பிலிருந்து நேற்றுமுன்தினம் செய்திகள் கசிய, நேற்று தலைநகரில் சில ஊடகங்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டன.

உடனேயே திறைசேரி பக்கத்திலிருந்து ஒரு விளக்கம் வந்தது. சேதன உரத்தை இறக்குமதி செய்வதற்கான அனுமதியே அது தவிர, இரசாயன உரங்களின் இறக்குமதிக்கான அனுமதி அல்ல என்று கூறப்பட்டது.

மாலையில் ஜனாதிபதி செயலகமே நிலைமையை உறுதி செய்தது. இரசாயன உரங்களின் இறுக்குமதிக்கான தடை தொடர்ந்தும் உறுதியாக நீடிக்கும், அதில் தளர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஜனாதிபதி செயலகம் உறுதிப்படத் தெரிவித்தது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தரப்பிலிருந்து வெளியான செய்திக்கு ஜனாதிபதி செயலகப் பக்கத்திலிருந்து பதிலடி தரப்பட்டிருப்பது சாதாரண விடயம் அல்ல.

மொட்டுக் கூட்டணியின் பிரதான பங்காளிக் கட்சியான சுதந்திரக் கட்சி திரும்பவும் மொட்டுக் கட்சிக்கு எதிராகக் குமுறத் தொடங்கியுள்ளது.

ஆசிரிய சங்கங்கள் ஆரம்பித்துள்ள தொழிற்சங்கப் போராட்டமும் மொட்டுக் கட்சிக் கூட்டணிக்குச் சுருக்கு வலையாகியிருக்கின்றது. பாடசாலைகள் இல்லைத்தானே, இப்போதைக்கு என்ன ஸ்டிரைக்கும் செய்து விட்டுப் போகட்டும் என்று பார்த்திருக்க முடியாத இக்கட்டு ஆட்சித் தரப்புக்கு.

ஆசிரியர்கள் தரப்பு நேற்று கண்டியில் ஆரம்பித்த ஊர்வலத்தில் பல்லாயிரம் பேர் திரண்டுள்ளனர். பேரணி இன்று கொழும்புக்குள் வரும் போது பெருங்களை கட்டும் என்கின்றன சில வட்டாரங்கள்.

*"உங்களின் P2P (பொத்துவில் முதல் பொலிகண்டி வரை) ஊர்வலம் மாதிரி நாளை (இன்று) எழுச்சி இருக்கும். இருந்து பாருங்கோ...!"* – என்று அடித்து கூறினார் தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவர்.

P2P பேரிணியும் கொரோனா உச்சத்துக்குள் தான் நடந்தது. இதுவும் அதே போன்ற நிலைமையில்தான் நடக்கின்றது.

இந்த ஆசிரியர் எழுச்சியை சுமுகமாகக் கட்டுப்படுத்தாவிட்டால் மொட்டுக் கட்சியின் அஸ்தமனம் அதில்தான் ஆரம்பிக்கும்.

★ ★ ★

யாழ்.மாவட்டத்தில் அரச உதவித் திட்டங்களின் கீழ் வீடமைக்கும் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் நடந்த ஊழல்கள், முறைகேடுகள் அம்பலமாகி பயனாளிகள் பட்டியல்கள் தொடர்பில் மேன்முறையீடு, விசாரணை, மீளாய்வு என்ற விவகாரம் தொடர்வது தெரிந்ததே. சுமார் 2 ஆயிரத்து 200 பேரைக் கொண்ட பட்டியலில் இதுவரை நடைபெற்ற விசாரணைகளில் 304 பயனானிகளின் பெயர்கள் நீக்கப்பட்டு விட்டன. தவறாக நுழைக்கப்பட்ட பெயர்களில் ஒரு தொகுதியே இவை. இன்னும் விடயம் முடியவில்லை. விசாரணை, மேன்முறையீடு என்ற விவகாரம் தொடர்கின்றது.

இப்படி முறைகோடான பயனாளிகள் பட்டியல்தான் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது முதன்முதலில் அம்பலமானது சாவகச்சேரி பிரதேச சபையில்தான். பயனாளிகள் பட்டியலில் ஆகக் கூடிய சுத்துமாத்து நடந்த பகுதி அதுதான். அங்கு இது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தரான துஷ்யந்தன் என்ற இளைஞரே துணிச்சலாக எழுந்து இந்தக் குளறுபடிகள் பற்றிய விடயத்தை விலாவாரியாக அம்பலப்படுத்தி குண்டை – குட்டை – முதலில் போட்டுடைத்தார். அவர் ஆரம்பித்து வைத்த விடயம் தோண்டத் தோண்ட பெரும் ஊழலாக வெளிப்பட்டு வருகின்றது.

அப்படித் துணிச்சலாக, நேர்மையாக, உண்மையாக நடந்த அரச ஊழியருக்குப் பரிசு சம்பந்தப்பட்ட பிரதேச செயலரின் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றார் இல்லை என்ற குற்றச்சாட்டில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்துக்கு இடமாற்றம். அதுவும் குற்றம் சுமத்தும் பிரதேச செயலரே விசாரணையும் நடத்தி, தீர்ப்பும் அளித்து, அந்த இளைஞனை இடம்மாற்றமும் செய்திருக்கின்றார்.



அரச உயரதிகாரிகள் 'கொமடி பீஸ்' ஆகவோ, 'டம்மி பீஸ்' ஆகவோ இருப்பதால் வந்த வினை இது.

மீள் குடியேற்ற, புனர்வாழ்வு நடவடிக்கைகளில் இத்தகைய ஊழல், சுத்து மாத்து நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான தனது விசேட பிரதிநிதி ஒருவரை வடக்கு, கிழக்குக்கென அமைச்சரவை அனுமதியோடு அரசு நியமித்திருந்தது என்பது தெரிந்ததே.

அந்தப் பிரதிநிதியான காசிலிங்கம் கீதநாத் நேற்று மேற்படி இளைஞன் துஷ்யந்தனை அவரது வீட்டிற்குப் போய் நேரில் சந்தித்துப் பேசினார். துணிச்சலாக நீதி உரைத்தவருக்கு நீதி கிட்டுமா? அரசின் பிரதிநிதி நீதி பெற்றுத் தருவாரா? அல்லது ஊழல்கள், மோசடிகள், சுத்துமாத்துக்குத் துணை போகும் எடுபிடி அதிகாரிகளுக்குத்தான் வடக்கில் காலம் என்பது தொடர்ந்து நீடிக்குமா? விரைவில் ஒரு பதிலை யாழ்.மக்களும், பயத்தில் மூச்சற்றிருக்கும் அரச அதிகாரிகளும் எதிர்பார்க்கின்றார்கள்.

– மின்னல் –

## யாழில் சட்ட விரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதிகளில் 'மாநகராட்சி அன்புடன் வரவேற்கின்றது' என்ற விளம்பரப் பலகைகளை நாட்டுவதாகத் தெரிவித்து நிறைவேற்றப்பட்டிருந்த சபைத் தீர்மானத்தை சமயோசிதமாகப் பயன்படுத்தி, சபையிடம் எந்தவொரு அனுமதியும் பெறாமல், மாநகர சபை அலுவலகத்திற்கே தெரியாமல், விடுமுறை தினத்தில், திருட்டுத்தனமாக வளைவு நாட்ட முதல்வர் அனுமதி வழங்கியதனால், அந்த நிறுவனம் வளைவை அமைக்க முற்பட்டபோது, சில உறுப்பினர்கள் மற்றும் நில உரிமையாளர்களால் அம்முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

இது தொடர்பில் ஆராய சபையின் விசேட கூட்டத்தை கூட்டுமாறு 8 உறுப்பினர்கள் ஒப்பமிட்டு கோரிக்கை விடுத்தனர்.

மாநகர சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் 8பேர் இணைந்து இந்தக் கோரிக்கையை 2ஆம் திகதி மாநகர முதல்வரிடம் கையளித்தனர்.

மாநகர கட்டளைச் சட்டத்தின் 18ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் 3இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஒப்பமிட்டு ஒரு விசேட கலந்துரையாடலிற்கு கோரிக்கை விடுத்தால் 3 வேலைநாள்கள் இடைவெளியில் அது தொடர்பில் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்பது சட்ட ஏற்பாடு.

இருந்தபோதும் இந்தக் கோரிக்கையை எடுத்த எடுப்பிலேயே நிராகரித்த முதல்வர், சபை எல்லைப் பகுதியில் சட்ட விரோதக் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன, இவை தொடர்பில் விவாதிப்பதானால் தினமும் விசேட கூட்டம் கூட்டப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார் என அறிய வந்துள்ளது.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதிக்கப்பட்ட மேலும் 1,754 பேர் குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து நேற்று வெளியேறியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 84 ஆயிரத்து 524 ஆக உயர்வடைந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## வயோதிபர் இல்லத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

20 வயோதிபர்களுக்கும், நிர்வாகக் குழுவைச் சேர்ந்த 6 பேருக்குமே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நிலவும் இட நெருக்கடியைக் கருத்தில்கொண்டு தொற்றாளர்கள் அனைவரும் வயோதிபர் இல்லத்திலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான வைத்திய வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

## கட்டுப்பாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பில் அரசால் முடிவு செய்யப்படும். சுகாதார அதிகாரிகள் நிலைமையை அவ்வப்போது மதிப்பாய்வு செய்த பிறகு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

நாடு தற்போது கொரோனா சூழ் நிலையை எதிர்கொண்டுள்ள அதே வேளை, பொருளாதாரம் மற்றும் சமூக அம்சங்களை சமநிலையாக அரசு பேணி வருகின்றது.

எனினும், கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட வேண்டும் அல்லது நாடு முடக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகள் உணர்ந்தால், தயக்கமின்றி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அத்தோடு, மீண்டும் அறிவிக்கும் வரை பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் – என்றார்.




**வடக்கு மாகாணத்தில் முதல் முறையாக 24 மணி நேர வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் தாரணி பல்பொருள் அங்காடி (தாரணி சுப்பர்மார்கெட்) நிறுவனத்தினர் நேற்று முதல் தமது 24மணி நேர சேவையினை யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் (சிவலிங்கப் புளியடிக்கும் தட்டாதெருவுக்கும் இடையில்) ஆரம்பித்துள்ளனர்.**

**யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவரது பாரியாருடன் இணைந்து தாரணி சூப்பர் மார்க்கெட் 24 மணி நேர சேவையை சமபிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.**

காலைக்கதிர் Kalaikkathir

# பாலியாற்று வடி நிலத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர்!

## வழங்க ஏற்பாடு செய்யுமாறு சி.வி.கே. அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை



பாலியாற்று வடிநிலத்திலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு குடிதண்ணீர் வழங்கல் தொடர்பாக வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அவரது அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் பொதுவாகவும் யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் தீவக பிரதேசங்களின் மக்கள் குறிப்பாகவும் கடந்த பல தசாப்தங்களாக அனுபவித்து வரும் குடிதண்ணீர் பிரச்சினைகள் பற்றி தாங்கள் தெளிவாகவே தெரிந்தவர் என்ற வகையில் அதனை மேலும் விவரிக்க வேண்டிய தேவை யில்லை என நம்புகிறேன்.

இந்த விடயம் தொடர்பில் ஒரு புதிய முன்மொழிவு பற்றி தாங்கள் கருத்து வெளியிட்டமையால் மேற்படி திட்டம் தொடர்பான விவரமான அறிக்கையைத் தங்களுக்குச் சமர்ப்பித்து அதனைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைஎடுக்கும்படி கோரி இக்கடிதம் தங்களுக்கு எழுதப்படுகிறது.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படலாம் என்ற பல முன்மொழிவுகளும் முன்னெடுப்புகளும் எதுவித முன்னேற்றமும் இன்றி காலம் கடத்தப்பட்டு கானல் நீராகவே காணப்படுகின்றன. இவற்றால் பொது நிதி விரயமாகியதுடன் ஆய்வாளர்களும் ஆலோசகர்களும் பயனடைந்தனரே தவிர மக்கள் எந்தப் பயனையும் அடையவில்லை.

கடந்த வடக்கு மாகாண சபைக் காலத்தில் 26.02.2018 ஆம் திகதி முதலமைச்சர் தலைமையில் பல வெளிநாட்டு உள்நாட்டு நிபுணர்கள் கலந்து கொண்ட நீர் வழங்கல் தொடர்பான கலந்துரையாடலில் இப்பொழுது பாலி ஆறு ஊடாக வருடம் பூராகவும் கடலுக்குச் செல்லும் நீரை பொருத்தமான திட்டத்தின் மூலம் குடாநாட்டுக்குச் கொண்டு சென்று அதன் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கு எதுவித எதிர்ப்பும் இருக்க நியாயமில்லை என்ற கருத்தும் கவனத்துக்கு எடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வட மாகாண பொறியியல் சேவைகளின் பிரதிப் பிரதம செயலாளர் தமது 13.03.2018 ஆம் திகதிய கடிதம் மூலம் நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளரிடம் அறிக்கை கோரியிருந்தார். இதற்கமைய நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளரின் 17.07.2018 ஆம் திகதிய அறிக்கையில் கீழ் பாலியாற்று வடிநிலத்திலிருந்து யாழ்.குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகம் சாத்தியமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் பிரதியை தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் பிரதிப் பொதுமுகாமையாளரின் சாதக பரிசீலனைக்கு தமது 19.07.2018 ஆம் திகதிய கடிதம் மூலம் பிரதம செயலாளர் முன்னளித்தார். இவற்றைத் தொடர்ந்து நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கு எழுதிய 07.08. 2018 ஆம் திகதிய கடிதம் மூலமும் அதே திகதியில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கும் அனுப்பி ஆலோசனைகளின் கீழ் பாலி ஆறு நீர் வழங்கல் திட்டத்துக்கு மட்டுப்படுத்துமாறு கோரியிருந்தார்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பான பிரேரணை ஒன்று வடக்கு மாகாண சபையில் 04.10.2018 ஆம் திகதிய 133 ஆவது அமர்வில் எம்மால் முன்மொழியப்பட்டு முதலமைச்சரால் வழிமொழியப்பட்டு ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு பிரதம செயலாளருக்கு மேல் நடவடிக்கைக்காக முன்னளிக்கப்பட்டது.

எம்மைப் பொறுத்தவரை வடக்கு மாகாண சபை இயற்றிய முக்கிய அபிவிருத்தித் திட்டம் இதுவே தான்.இந்த விடயம் தொடர்பாக முன்னாள் வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் இராகவன் 22. 01.2019 ஆம் திகதியிலும் தற்போதைய ஆளுநர் திருமதி.பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் 12.02.2020 மற்றும் 18.11.2020 ஆம் திகதிகளில் எழுதிய கடிதங்களில் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என எழுதியிருக்கிறேன்.இந்த நிலையில் பின்வரும் விடயங்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் பெறுதல் என்பது பல்வேறு காரணங்களால் சாத்தியமாகாது என்ற யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு இனிமேலும் அது பற்றி விவாதிப்பது பலனற்றது.

மகாவலி நீர் பெறுதல் மொறகாகந்த நீர் பெறுதல் என்பது இப்போதைக்கு சாத்தியமானது அல்ல என்று கருதப்படுகின்றது. எனவே, வடக்கு மாகாணத்துக்குள்ளேயே இருக்கும் பாலி ஆற்றினூடாக வருடம் பூராகவும் கடலைச்சென்றடையும் நீரைத் திசை திருப்பி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியும் என்பதை தெளிவாகப் புரிந்து கொண்ட வடக்கு மாகாண சபை, அதன் ஒரேயொரு குடிதண்ணீர் விநியோகத் திட்டமாக அதன் 04.10.2018 ஆம் திகதிய அமர்வில் ஏகமனதாகத் தீர்மானம் இயற்றியது.

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் பொறியியல் சேவைகள் பிரதிப் பிரதம செயலாளர் ஆகியோரின் தொடர் நடவடிக்கைகளால் பிரதமரின் அமைச்சின் ஆலோசனைக் கூட்டங்களில் பரிசீலிக்கப்பட்டு சாத்தியப்பாட்டு அறிக்கை பெறும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, எதுவித பிரச்சினைகளையும் எதிர்நோக்காத இந்தத் திட்டத்தை மிகத்துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். – என்றுள்ளது.

## வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண்ணின் தங்க மோதிரம் களவு!

**(ந.லோகதயாளன்)**

ஒவ்வாமை காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பல்கலைக்கழக மாணவியின் தங்க மோதிரம் கள வாடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 2 ஆம் திகதி மாலை நேரம் ஒவ்வாமை காரணமாக சேர்க்கப்பட்ட பல்கலைக் கழக மாணவி ஒருவர் மயக்க முற்றமையை யடுத்து உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. இருந்த போதும் மாணவி மயக்கம் தெளிந்து பார்த்தபோது தனது கையில் இருந்த தங்க மோதிரம் களவாடப் பட்டமையை உணர்ந்தார்.

தனது தங்க மோதிரத்தை காணாமை தொடர்பில் மாணவி வைத்திய சாலைப் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றமையையடுத்து இந்த விடயம் தற்போது பொலிஸிடம் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இருந்தபோதும் தங்க மோதிரம் தொடர்பில் இது வரை உறுதியான தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

## கிளிநொச்சி குளத்தை அபிவிருத்தி செய்து சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்கும் திட்டம்



கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள கிளிநொச்சி குளத்தை அபி விருத்தி செய்து, அதனை சுற்றுலாத்தளமாக அமைப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

இதற்கான திட்டமிடல் ஒன்று இரணைமடு நீர்பாசன பொறியியலாளர் செந்தூரனால் நேற்று (புதன்கிழமை) இந்த குளத்தைப் பார்வையிட வந்த குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த திட்டமிடல் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி குளத்தை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்து பொழுது போக்கு மையமாக மாற்றும் வகையில் இந்தத் திட்டம் முன்மொழியப் பட்டுள்ளது.

அப்பகுதியில் நடை பயிற்சிக்கான வலயம், சிறுவர் பூங்கா, நீரில் பயணிக்கும் வகையிலான வசதி, பொழுது போக்கு வசதிகள், மின்னொளியூட்டல், வர்த்தக வசதிகள் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

குளத்தின் சூழவுள்ள பகுதி அணைகட்டாக்கப்பட்டு, அதில் நடை பயிற்சிக்கான வசதிகள், இருக்கை வசதிகள் உள்ளடக்கிய முதல் கட்டப் பணிகளுக்கு; 11 கோடி ரூபா செலவு தொகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பொழுதுபோக்கு இடங்கள் மற்றும் நடையிற்சிக்கான பொருத்தமான இடங்கள் இல்லாத நிலையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் நன்மையளிக்கும் என மாவட்டத்தில் உள்ள புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

## கொரோனாவால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்ய இடப்பற்றாக்குறை!

மட்டக்களப்பு – ஓட்டமாவடி சூடுபத்தினசேனை பகுதியில் சரீரங்களை அடக்கம் செய்வதற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்நௌபர் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சரீரங்களை அடக்கம் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட 5 ஏக்கர் காணியில் இதுவரையில் ஆயிரத்து 279 சரீரங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இன்னும் 700 சரீரங்களை மட்டுமே குறித்த பகுதியில் அடக்கம் செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்தம், 50 இற்கும் மேற்பட்ட மரணங்கள் பதிவாகும் நிலையில், சரீரங்களை அடக்கம் செய்வதற்கான மற்றுமோர் இடத்தை சுகாதாரத்துறை மற்றும் நிபுணர்கள் விரைவில் அடையாளப்படுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கொரோனாத் தொற்றிலிருந்து ஆயிரத்து 754 பேர் மீண்டனர்

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் ஆயிரத்து 754 பேர் பூரணமாகக் குணமடைந்து நேற்று (புதன்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகச் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 84 ஆயிரத்து 524 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 16 ஆயிரத்து 219 ஆகப் பதிவாகியுள்ளது.

அதேநேரம், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 645 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மக்களுக்கு ஆலோசனை; அரசுக்கு அல்ல!

கொவிட் தொற்றுத் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து தொடர்ந்து எச்சரிக்கை மேல் எச்சரிக்கை வந்து கொண்டிருக்கின்றது.

ஆனால், அதிகார வர்க்கமோ – ஆட்சித் தரப்போ – அந்த எச்சரிக்கைகளை கவனத்தில் எடுப்பதில்லையோ என்று தோன்றுகின்றது.

இந்த எச்சரிக்கைகள் எல்லாம் 'செவிடன் காதில் ஊதிய சங்காக' – 'புறக்குடத்து நீராக' – அவமாகிப் போவதுதான் விசனத்துக்குரியது.

'நாட்டில் தினசரி பி.சி.ஆர்.பரிசோதனைகளின் பின் அறிவிக்கப்படும் தொற்றாளர்கள் எண்ணிக்கையைப் போல ஐந்து மடங்கு கொவிட் தொற்றாளர்கள் புதிது புதிதாக வெளியே உருவாகி இருப்பார்கள். பி.சி.ஆர். பரிசோதனைகள் பரவலாக்கப் படாமையாலும் மட்டுப்படுத்தப்பட்டமையாலும் இந்த நிலைமை' – என்று இலங்கை மருத்துவ சங்கம் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது.

இந்தியாவில் அடையாளம் காணப்பட்ட திரிவடைந்த கொரோனா ரகமான பி.1.617.2 என்ற டெல்டா வைரஸ் குறித்து மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய சமயம் இது என்று இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

ஒரு டெல்டா ரக கொரோனா வைரஸ் தொற்றாளர் மூலம் மேலும் ஏழு முதல் பத்துப் பேருக்குத் தொற்று ஏற்படாலம் என்றும் அந்த அமைப்பு எச்சரிக்கின்றது.

ஏப்ரல் ஜூன் மாதங்களில் இங்கு பரவிய திரிவடைந்த கொரோனா வைரஸ் லண்டனில் முதலில் அடையாளம் காணப்பட்ட பி.1.1.7 எனக் குறிப்பிடப்படும் அல்பா ரகமாகும்.

ஆனால் இப்போது திரிவடைந்த நிலையில் பரவி வருவது – குறிப்பாகத் தலைநகர் கொழும்பு உட்பட்ட மேற்கு மாகாணத்தில் பரவி வருவது – இந்தியத் திரிவான டெல்டா வைரஸ் ரகம் என்று சுட்டப்படுகின்றது.

இது பரவல் வேகம், வீரியம் அதிகம் கொண்டது.தொற்றாளர்களுக்கு பாதிப்பும் உச்சமாகத் தரக் கூடியது. அதிக மரணத்தை ஏற்படுத்தக் கூடிய வைரஸ் என்றும் கூறப்படுகின்றது.

கொரோனா வைரஸுக்குத் தடுப்பூசி ஏற்றும்பணி காலம் பிந்தியாவது முனைப்புப் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால், சாதாரண கொரோனா வைரஸ் பரவலுக்கு இந்தத் தடுப்பூசி தாக்குப் பிடிக்கும். எனினும் டெல்டா, அல்பா ரக – திரிவடைந்த – கொரோனா வைரஸ்களுக்கு முழுக் காப்பரண் தரக் கூடியதல்ல நாம் பெற்றுக் கொள்ளும் தற்போதைய தடுப்பூசிகள்.

இந்தப் பின்புலத்தில் மக்களை எச்சரிக்கையாக இருக்கும் படி நிபுணர்களும், மருத்துவர்களும், அரசு அதிகாரிகளும், ஆட்சித் தரப்பினரும் மக்களிடம் திருப்பித் திருப்பிக் கோரி விடுகின்றார்கள்.

மக்களை ஒன்றும் அறியாத முட்டாள்கள் என்று கூறுவது போல இருக்கின்றது இப்படித் திரும்பத் திரும்ப விடுக்கும் அழைப்புகள்.

நாட்டை எச்சரிக்கை நிலையில் வைத்திருப்பதில் நாட்டுத் தலைமைக்கும், அதிகாரிகளுக்கும், ஆட்சித் தரப்பினரும் உண்மையான எண்ணம் இருந்தால்தான் இத்தகைய கோரிக்கைகளை மக்களிடம் விடுப்பதில் ஒரு நியாயம் இருக்க முடியும்.

அரசோ கட்டுப்பாடுகளைத் தளர்த்துகின்றது. போக்குவரத்துக்களைத் திறந்து விடுகின்றது. வீட்டில் இருந்து பணியாற்றியவர்களைக் கூட வேலைக்கு வா என்கின்றது. மாணவர்கள் இல்லாத பாடசாலைக்கு ஆசிரியர்களை சமுகம் தரச் சொல்லிக் கட்டாயப்படுத்துகின்றுது. எந்தவித நோக்கங்கள், இலக்குகளுமின்றி ஆட்சித் தரப்பு மக்களைத் தேவையில்லாமல் ஒன்று கூட்டுகின்றது என்று பார்த்தால், மறுபுறத்தில் அவசர அவசரமாகப் பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து கல்வி அமைச்சர் பிதற்றுகின்றார்.

மாற்று முறைகளில் – தொலைத் தூரக் கல்வி, இணையக் கல்வி போன்றவை மூலம் – கல்விப் போதனையைத் தொடர வழியிருந்தும் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்காமல், பாடசாலைகளை மீண்டும் திறப்பது பற்றி சிரத்தை காட்டுகின்றார்கள் அரசுத் தரப்பினர்.

இன்றைய நிலையில் பாடசாலைகளைத் திறந்து மாணவர்களை ஒன்று கூட்டினால் அதோ கதிதான். பாடசாலைகள் கொரோனா பரப்பும் மையங்களாகி விடும்.

கொரோனாப் பரவல் என்ற ஆபத்து இருப்பது பற்றிய சிரத்தை தனக்குள்ளது என்று காட்டாமல் விட்டேத்தியாக நடக்கின்றது அரசு. கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, முடக்கங்களை நீக்கி, தொற்றுப் பரவலுக்கான அடிப்படைகளை அத்திவாரம் போல அமைத்து வருகின்றது அரசு.

அப்படி இருக்கையில், அதைக் கவனிக்காமல் விட்டு விட்டு, எல்லோரும் எழுந்து நின்று, மக்களை எச்சரிக்கையாக இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள் என்று ஆளாளுக்கு அபாயச் சங்கு ஒலிக்கின்றார்களே. ஏன்?

அரசுக்கும், அதிகார பீடத்துக்கும் எடுத்துரைத்துத் திருத்த முடியாதவர்கள், மக்களுக்கு மட்டும் தங்களின் ஆலோசனைகளை முன்வைப்பதில் அர்த்தமில்லை.

# பொதுப் போக்குவரத்துக்கு விசேட சுற்றுநிருபம் வரும்

### அமைச்சர் ரமேஸ் பத்திரன கூறுகிறார்



பொதுப் போக்குவரத்துக்களில் சுகாதார விதிமுறைகள் முறையாக பேணப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளமையால், இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விரைவில் விசேட சுற்று நிரூபம் வெளியிடப்படும் என்று அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

பொதுப் போக்குவரத்துக்களில் சுகாதார விதிமுறைகள் பேணப்படாமையால் மக்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளமை தொடர்பில் ஊடகங்கள் ஊடாக அறியக் கிடைத்தது. எனவே, இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விரைவில் சுற்று நிரூபம் வெளியிடப்படும்.

அரச உத்தியோகத்தர்களில் பெருமளவானோருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய நாட்டை வழமைக்குக் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இது நாட்டு மக்கள் அனைவருக்காகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும். எவ்வாறிருப்பினும் நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் காணப்படும் நிலைமைகளை அவதானத்தில் கொண்டு உரிய தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் அவற்றின் பிரதானிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடைமுறைகளின் போது ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். - என்றார்.

# கொரோனாவால் உயிரிழந்த பலருக்கு இரண்டுக்கும் மேற்பட்ட நோய் தாக்கம்

### அமைச்சரவைப் பேச்சாளர்

இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நோய்களின் தாக்கமே காரணம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவை இணை ஊடகப்பேச்சாளர் வைத்தியர் ரமேஷ் பத்திரண இதனைக் குறிப்பிட்டார்.

கொரோனா தொடர்பான இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும், பெரும்பாலானவர்களுக்கு கொமொர்பிடிட்டி எனப்படும் பிற சிக்கல்களும் இருந்தன எனக் கூறினார்.

மேலும் இறந்தவர்களில் சிலர் தடுப்பூசி போடப்படவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் ரமேஷ் பத்திரண கூறினார். இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்த கடந்த ஒருவார காலத்தில் மட்டும் இலங்கையில் சுமார் 450 பேர் கொரோனாத் தொற்றால் உயிரி ழந்துள்ளனர். இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 645 ஆக உயர்ந்துள்ளது.

# சுகாதார நடவடிக்கைகளின் பின்னர் நாட்டைத் திறப்பதற்கு அரசு முயற்சி

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 05

பொருளாதாரம் நிலையானதாக இருப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதற்கமைவாக முடிந்த வரை சுகாதாரம் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்த பின்னர் நாட்டை முழுமையாகத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இதனைக் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்றைக் கையாளும் போது அதிகாரிகள் சமநிலையை பேண வேண்டும் என்றும் இல்லையெனில் பொருளாதாரம் முற்றிலுமாக வீழ்ச்சியடையலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.



# 3 நாள்களில் 3 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி 2 ஆவது டோஸ் செலுத்தப்பட்டது

நாட்டில் கடந்த 3 தினங்களில் மாத்திரம் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 3 லட்சத்து 70 ஆயிரத்து 761 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த செவ்வாய்க்கிழமை மாத்திரம் நாட்டில் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 664 பேருக்கு அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, நாட்டில் இதுவரையில், 7 லட்சத்து 56 ஆயிரத்து 646 பேருக்கு அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேநேரம், இதுவரையில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெறாதோர், உடனடியாக தடுப்பூசி மையங்களுக்குச் சென்று அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 766 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸும் சினோபார்ம் தடுப்பூசியின் இரண் டாவது டோஸ் 9 ஆயிரத்து 220 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், செவ்வாய்க்கிழமை ஆயிரத்து 155 பேருக்கு மொடர்னா தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 35

எதிர்பார்த்தபடியே கிட்டுவின் வீட்டுக் காவல் பேட்டி வெளியானதை அடுத்து நெருக்கடி தேடி வந்தது. இரண்டாம் நாள் ஆனந்த விகடன் அலுவலகத்தில் இருந்தேன். அப்போது ஆனந்த விகடன் அலுவலகம் அண்ணா சாலையில் இருந்தது. (அந்த இளம் வயதில் தினசரி காலையும் மாலையும் வேலைக்குப் போய் திரும்பும் போது 23 சி பஸ் சேவையில் தினசரி பயணிப்பது இன்றும் நினைத்துப் பார்த்தாலும் சுகானுபவம் மிக்கது.)

பெசண்ட் நகர் வீட்டிலிருந்து நண்பர் சிவராமின் உதவியாளர் ஒருவர் ஓடி வந்தார்

*“திடீரென எட்டுப்பத்து காவல்துறையினர் வீட்டிக்கு வந்தனர் சுருட்டை முடி கொண்ட யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர் இங்கேயா தங்கி இருக்கின்றார் என்று விசாரித்தார்கள். வீட்டுக்குள் தேடினர். வீட்டில் பல பொடியன்கள் இருந்ததால் ஒவ்வொருவரையும் சந்தேகத்துடன் பார்த்தனர். உங்கள் சூட்கேஸையும் திறந்து பார்த்தார்கள். ஆனால் அடையாளம் காணமுடியவில்லை. வீட்டில் இருந்தவர்கள் உங்களை தெரியாது என்று கூறி அனுப்பி வைத்து விட்டனர்”* - என்ற தகவலைத் தந்தார் அவர்.

நான் வெலவெலத்துப் போனேன். அந்த சூட்கேஸில்தான் கிட்டுவை நான் பிடித்த எஞ்சிய படங்களின் பிரதிகள் இருந்தன. தெய்வாதீனமாக அவர்கள் கண்களில் படவில்லை.

ஜூனியர் போஸ்டில் இந்தப் பேட்டி வெளியாகும் அதே சமயத்தில் யாழ்ப்பாணத்திலும் உதயனில் அது தவறாது வெளிவருவதற்குத்தான் அதனை என் வழமையான செய்தி என்வலப்பில் அனுப்பி இருந்தேன். இந்தியப் படை மேஜர் ஒருவருக்கு முன்னால் அந்த என்வலப்பை உடைத்து, கிட்டுவின் படம் வெளியே தெரிய எங்கள் உதயன் பிரதம ஆசிரியர் கானமயிலநாதன் வெலவெலத்துப் போன கதையை முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

உதயனில், வீட்டுக் காவலுக்குள் புகுந்து கிட்டுவிடம் பெற்ற பேட்டி என என் பெயருடன் தலைப்புச் செய்தியாக இந்த விடயம் விலாவாரியாகப் பிரசுரமாகியிருந்தது. அது வன்னிக் காட்டுக்குள் வரை எட்டி,தலைவர் வரைத் திருப்தி என்று பின்னர் அறிந்தேன். ஆரம்பக் கட்டத்திலேயே என்னைப் பற்றி ஒரு பதிவு விடுதலைப் புலிகள் தரப்பில் ஏற்படுவதற்கு நான் ஜூனியர் விகடனைத் தளமாகப் பயன் படுத்தி எழுதிய - அம்பலப் படுத்திய - இத்தகைய பல ஆழமான கட்டுரைகள் காரணமாகின.

தலைவர் பிரபாகரனுடன் நான் இருக்கும் படத்தை ஒரு தடவை ஜூ.வி. பிரதான செய்தியாக ‘வந்தார் பிரபாகரன்’ என்று தலைப்பிட்டு பிரபாவுடன் நமது நிருபர் என்று அடி குறிப்புடன் வெளியிட்டிருந்தது. அவையெல்லாம் பின்னாள்களில் நடந்தவை.

கிட்டுவின் வீட்டுக்காவல் பேட்டியை அடுத்து நான் தங்கியிருந்த வீட்டின் மீது காவல்துறை பாய்ந்தனர் என்ற தகவலால் நானும் வெலவெலத்துப்போனேன். அதையும் ஒரு செய்தியாக்கி பரபரப்பாக்கினால் பாதுகாப்பாக இருக்கும் என்றார் ஜூனியர் போஸ்ட் ஆசிரியரான சுதாங்கன். அவர் என் நண்பர். கடந்த வருடம் திடீரெனக் காலமாகிவிட்டார். என்னை விட இரண்டு அல்லது மூன்று வருடங்கள் வயது மூத்தவர். நான் ஜூவியில் பணியாற்றிய சமயம் ஆனந்தவிகடனில் வரவேற்புப் பெற்ற ஒரு தொடர் நாவல் எழுதினார். அதன் கதாநாயகனுக்கு என் நினைவாக ‘வித்தியாதரன்’ என்று அவர் பெயரிட்டிருந்தார். அவ்வளவு நண்பர்கள் நாங்கள்.

ஆயினும், இந்த விடயத்தை அவசரப்பட்டு விவகாரமாக வேண்டாம் என்றார் ராவ் ஸார். எஸ்.டி.சிவநாயகம் ஐயா போல எப்போதும் பொறுப்புள்ள - தூரப்பார்வை உள்ள - ஒரு பத்திரிகையாளர் அவர். காவல்துறை வட்டாரங்களில் அவருக்குப் பல தொடர்புகள் இருந்தன. தொலைபேசியிலேயே தகவல்களை - விடயங்களை - துல்லியமாகத் திரட்டும் திறன் அவருக்கு இருந்தது. என்னை இரண்டு நாள்கள் ஜூ.வி. அலுவலகத்திலேயே தங்கும்படி கூறியவர் அடுத்த நாள் நேரம் ஒதுக்கி அலுவலகத்தில் யாரோ காவல்துறை உயர் அதிகாரியைச் சந்திக்கப் போனார். சுமார் ஒரு மணி நேரம் கழித்து சிரித்த முகத்துடன் வந்தார்.

*“ப்ரொப்ளம் சோல்வ்ட். இனிமேல் ஒன்றும் நடக்காது. நீங்கள் உங்கள் வேலையை வழமை போலப் பாருங்கள். உங்களைத் தேடி யாரும் வீட்டுக்கு வர மாட்டார்கள். யாருக்கும் பயப்படத் தேவையில்லை. நீங்கள் புலி அல்லர், சுயாதீன ஊடகவியலாளர் என்பதை தெளிவுபடுத்தியாயிற்று. கிட்டு வீட்டு பக்கம் மட்டும் போவதைத் தவிர்த்து கொள்ளுங்கள்”* என்றார் ராவ் ஸார்.

அந்தத் தடவை தமிழகத்தை விட்டு புறப்படும் வரை நான் கிட்டுவின் வீடு இருந்த திருவான்மியூர் பக்கமே தலை வைத்து படுக்க வில்லை.

கிட்டுவின் அந்தப் பேட்டி ஜூவியில் பின்வருமாறு அமைந்தது:-

*“இந்தியப் படைகள் வெளியேறட்டும் என்று கோரவில்லை!”*

- கிட்டு பேட்டி

(நமது விசேட நிருபர்)

*“இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என புலிகள் கோரமாட்டார்கள். அப்படி வெளியேறுவதை விடுதலைப் புலிகள் விரும்பவுமில்லை.*

*“இந்தியா தனது பூகோள ரீதியான பாதுகாப்புக்காக இலங்கையில் நிலைகொண்டிருப்பது அவசியம் என்பதை உணர்கிறோம். இந்தியாவுக்கு எதிரான அந்நிய சக்திகள் எதற்கும் இந்தப் பகுதியை அடகு வைக்கவும் நாம் விடமாட்டோம்”*


*- இப்படிக் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிட்டு.*

*இந்திய சமாதானப்படை - புலிகள் மோதல்கள் உருவானதையடுத்து திருவான்மியூரில் ஒதுக்குப்புறமான வீடொன்றில் அவர் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டிருக்கிறார்.*

*கிட்டு கூறினார்:-*

*“உண்மையில் இந்தியாவுடன் ஒரு மோதல் உருவாவதை நாம் என்றும் விரும்பவில்லை. இந்தியாவை எமது நேச சக்தியாகவே நாம் நினைக்கிறோம். இதனை இந்தியத் தலைமைப்பீடம் உணரவில்லை, அவர்கள் ஜெயவர்த்தனாவின் நச்சுவலையில் சிக்கியதால்தான் இப்படி நடந்து கொள்கிறார்கள் என நினைக்கிறேன்.*

*இந்தியப் படைகள் எமது தாயகத்தை விட்டு வெளியேற வேண்டியதில்லை. அங்கேயே இருக்கட்டும். ஆனால், மக்கள் வாழும் பகுதிகளுக்குள இராணுவம்*



“இந்தியப் படைகள் வெளியேறட்டும் என்று கோரவில்லை!”

— கிட்டு பேட்டி

(நமது விசேஷ நிருபர்)

கிட்டு

“இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் எனப் புலிகள் கோரமாட்டார்கள். அப்படி வெளியேறுவதை விடுதலைப்புலிகள் விரும்பவுமில்லை.

இந்தியா தனது பூகோளரீதியான பாதுகாப்புக்காக இலங்கையில் நிலைகொண்டிருப்பது அவசியம் என்பதை உணர்கிறோம். இந்தியாவுக்கு எதிரான அந்நிய சக்திகள் எதற்கும் இந்தப் பகுதியை அடகு வைக்கவும் நாம் விடமாட்டோம்.”

— இப்படிக் கூறினார் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிட்டு.

இந்திய சமாதானப்படை—புலிகள் மோதல்கள் உருவானதையடுத்து திருவான்மியூரில் ஒதுக்குப்புறமான வீடொன்றில் அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். கிட்டு கூறினார்:

“உண்மையில் இந்தியாவுடன் ஒரு மோதல் உருவாவதை நாம் என்றும்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

‘ஜூனியர் போஸ்ட்’ முதல் இதழில் முன்பக்கத்தில் வெளியான கிட்டுவின் பேட்டி...

*நிலைகொண்டிருந்தால சமாதானம் எப்படிப் பிறக்கும்? மக்கள் சுதந்திரமாக எப்படி நடமாட முடியும்? ராணுவக் கெடுபிடிக்குள் மக்கள் இருக்கும் போது எப்படி அமைதி ஏற்பட முடியும்? ஆகவேதான் ஒக்டோபர் 10ஆம் தேதிக்கு முந்தைய நிலைகளுக்கு இந்தியப் படைகள் திரும்ப வேண்டும் என்றும், ஒக்டோபர் 10இற்குப் பின்னா மக்கள் நடமாடும் பகுதிகளுக்குள் அமைக்கப்பட்ட முகாமகள் மூடப் பட வேண்டும் என்றும் நாம் கோருகிறோம்.*

*கேள்வி:- “ஆயுதங்களை முதலில் ஒப்படையுங்கள். அதன் பின்னர் இந்தியப் படைகள் அக்டோபர் 10ஆம் திகதிக்கு முந்தைய நிலைக்குத் திரும்பும் - இப்படி இந்தியா கூறினால் ஆயுதங்களை ஒப்படைப்பீர்களா?”*

*கிட்டு:- “நிச்சயமாக, அப்படி பகிரங்கமாக ஓர் உறுதிமொழி கூறினால் நாம் அதனை ஏற்றுச் செயற்படத் தயார். ஆனால், இப்படி எம்முடன் பேசித் தீர்வு காண இந்தியா விரும்புவதாகத் தெரியவில்லை. எங்களுடன் பேசுவதை ஒரு கௌரவப் பிரச்சினையாகவே (Prestige Issue) இந்திய அரசு பார்க்கிறது.*

*இந்தியப் படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாகப் பல செய்திகள் வெளியாகின்றன. அவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் அல்லர். மனிதாபிமானமுடையவர்களும் இருக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் எமது தமிழ்ப் பெண்கள் பலரை இக்கட்டான நிலையிலிருந்து அவர்கள் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை நான ஒப்புக்கொள்கிறேன.*

*வடக்கு, கிழக்கில் தேர்தல்கள் எதனையும் நடத்துவதற்கு முன்னர் கிழக்கில் சிங்கள இனவாத அரசினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் குறித்து ஒரு முடிவு காணப்பட வேண்டும்.*

*ஏற்கெனவே குடியேறியவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது எப்படி என்று இலங்கை அரசுத் தரப்பில் கேட்கிறார்கள். நூற்றைம்பது, இரு நூறு வருடங்களுக்கு முன்னர் மலையகத்தில் குடியேறிய இந்திய வம்சாவளியினரைப் பிரஜாவுரிமை பறித்து அங்கிருந்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பமுடியும் என்றால், கடந்த முப்பது ஆண்டு காலத்தில் தமிழர் தாயகத்தில் அத்துமீறிக்குடியேறிய, சிங்களர்களை அங்கிருந்து ஏன அகற்ற முடியாது?*

*ஈழத் தமிழர் பிரச்சினை தீர்ந்தவுடன் தனது படைகள் அங்கிருந்து வெளியேறி விடும் என இந்தியா கூறுவது போலவோ அல்லது -*

*எல்.டி.டி.ஈ. வீரர்களை அடக்கியவுடன் இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறிவிடும் என ஜெயவர்த்தனா கூறுகின்றமை போலவோ -*

*எதுவும் நடக்கப் போவதில்லை. இன்னும் சில ஆண்டுகளுக்கு இலங்கையில் நிலைகொள்வது என இந்தியா தீர்க்கமாக முடிவெடுத்திருப்பது எமக்குத் தெரியும். தான் அங்கு தொடர்ந்து இருப்பதற்காகத்தான் இந்தியா அங்கு சில பிரச்சினைகளை வேண்டுமென்றே வளர்க்க முயன்று கொண்டிருக்கிறது.*

*ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். எமது இயக்கத்தை எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது.”*

*- கிட்டு உணர்ச்சியுடன் சொன்னார்.*

-இப்படி அமைந்தது அந்த வீட்டுக்காவல் பேட்டி.

சரி இனி அடுத்த விடயத்துக்கு வருவோம்.

இப்படி வீட்டுக்காவலில் இருந்த கிட்டுவை அங்கு இருந்த அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு சந்தித்த இன்னொரு முக்கிய பிரமுகர் பற்றியும் பிரஸ்தாபித்து இருந்தேன் அல்லவா? அவர் யார் ?

அவரும் ஒரு முன்னாள் பத்திரிகையாளர், என்னைப் போலவே எஸ்.டி.சிவநாயகம் ஐயா - இரத்தினசிங்கம் இணையின் கீழ் பணியாற்றியவர். பின்னாள்களில் மிக முக்கிய பிரமுகர்.

அவர்தான் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

1987 பிற்பகுதியில் இந்தியப் படைகள் புலிகள் மோதலை அடுத்து இந்தியாவிற்குள் நுழைந்து தலைமறைவு வாழ்க்கை நடத்திய பாலசிங்கம் தம்பதியினர், அப்போது அதிகாரிகளின் கண்களில் மண்ணை தூவி விட்டு வீட்டுக் காவலுக்குள் ஊடுருவி கிட்டுவைச் சந்தித்து மீண்டனர்.

அது பற்றிய சுருக்கக் குறிப்பை நாளை பார்ப்போம். (வளரும்....)



எண்பதுகளில் ‘தினபதி’ ஆசிரியர் சிவநாயகமும் ‘தினகரன்’ ஆசிரியர் சிவகுருநாதனும் ஒரு நிகழ்வில் சந்தித்தபோது.....

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | கணிதம் | அலகு 18

## சதவீதம்

பகுதியெண்ணை 100 ஆகக் கொண்ட பின்னமொன்றின் தொகுதியெண்ணானது சதவீதம் எனப்படும்.

உதாரணம் : (1) $\frac{21}{100} = 21\%$

(2) $\frac{4}{25} = \frac{4\times4}{25\times4} = \frac{16}{100} = 16\%$

| | |
|---|---|
| 10 × 10 = 100 | 25 × 4 = 100 |
| 20 × 5 = 100 | 50 × 2 = 100 |

பின்வருவனவற்றைச் சதவீதமாகத் தருக

| | |
|---|---|
| 01. $\frac{20}{100}$ = .............. | 01. $\frac{1}{2}$ = .............. |
| 02. $\frac{16}{100}$ = .............. | 02. $\frac{3}{4}$ = .............. |
| 03. $\frac{45}{100}$ = .............. | 03. $\frac{2}{5}$ =.............. |
| 04. $\frac{79}{100}$ = .............. | 04. $\frac{3}{10}$ =.............. |
| 05. $\frac{134}{100}$ = .............. | 05. $\frac{6}{5}$ =.............. |
| 06. $\frac{x}{100}$ = .............. | 06. $\frac{8}{5}$ =.............. |
| 07. $\frac{20x}{100}$ = .............. | 07. $\frac{5}{20}$ =.............. |
| 08. $\frac{84}{100}$ = .............. | 08. $\frac{3.5}{25}$ =.............. |
| 09. $\frac{90}{100}$ = .............. | 09. $\frac{20}{25}$ =.............. |
| 10. $\frac{2.1}{100}$ = .............. | 10. $\frac{6}{20}$ =.............. |
| 11. $\frac{0.35}{100}$ = .............. | 11. $\frac{23}{20}$ =.............. |
| 12. $1\frac{9}{100}$ = ........... | 12. $\frac{25}{20}$ =.............. |
| 13. $2\frac{50}{100}$ = ........... | 13. $\frac{2}{50}$ =.............. |

பின்னமொன்றை அல்லது தசமமொன்றைச் சதவீதமாக்குவதற்கு 100 இனால் பெருக்கவேண்டும்.

உதாரணம் 1 : $\frac{14}{35} = 40\%$

$\frac{\cancel{14}^{2}}{\cancel{35}_{\cancel{5}\,1}} \times \cancel{100}^{20} = 40\%$

உதாரணம் 2 : 0.7 = 70%

0.7 X 100 = 70%

பயிற்சி

| | |
|---|---|
| 01. $\frac{1}{2}$ = .............. | 01. 0.7 = .............. |
| 02. $\frac{3}{8}$ = .............. | 02. 2.4 = .............. |
| 03. $\frac{1}{12}$ = .............. | 03. 7.8 =.............. |
| 04. $\frac{5}{6}$ = .............. | 04. 4.025=.............. |
| 05. $\frac{4}{15}$ = .............. | 05. 0.067=.............. |
| 06. $\frac{9}{11}$ = .............. | 06. 0.45 =.............. |
| 07. $\frac{28}{40}$ = .............. | 07. 0.05 =.............. |
| 08. $\frac{18}{24}$ = .............. | 08. 1.67 =.............. |
| 09. $\frac{15}{30}$ = .............. | 09. 25.4 =.............. |
| 10. $\frac{3}{60}$ = .............. | 10. 3.678 =.............. |
| 11. $1\frac{3}{7}$ = .............. | 11. 23.567=.............. |
| 12. $1\frac{1}{3}$ = ........... | 12. 123.5 =.............. |
| 13. $1\frac{3}{5}$ = ........... | 13. 234.01=.............. |
| 14. $3\frac{1}{3}$ = ........... | 14. 45.99=.............. |
| 15. $33\frac{1}{3}$ = ........... | 15. 47.09 =.............. |

விகிதங்களைச் சதவீதமாக்கல்

உதாரணம் 3 : 5 $= \frac{3}{5} = \frac{3\times20}{5\times20} = \frac{60}{100} = 60\%$

$\frac{3}{4} = \frac{3\times25}{4\times25} = \frac{75}{100}$ 75%

| | | | |
|---|---|---|---|
| 01) 3 : 4 | = .................... | =................. | =........................ |
| 02) 1 : 2 | = .................... | =................. | =........................ |
| 03) 2 : 5 | = .................... | =................. | =........................ |
| 04) 2 : 25 | = .................... | =................. | =........................ |
| 05) 3 : 10 | = .................... | =................. | =........................ |
| 06) 2 : 5 | = .................... | =................. | =........................ |
| 07) 8 : 5 | = .................... | =................. | =........................ |
| 08) 5 : 20 | = .................... | =................. | =........................ |
| 09) 8 : 50 | = .................... | =................. | =........................ |
| 10) 1 : 25 | = .................... | =................. | =........................ |

சதவீதத்தைப் பின்னமாக மாற்றல் சதவீதத்தைப் பின்னமாக மாற்றுவதற்கு 100 இனால் வகுக்க வேண்டும்

சதவீதத்தை விகிதமாக மாற்றல்

உதாரணம் : 30%

$30\% = \frac{30}{100} = \frac{3}{10} = 3 : 10$

01. $25\% = \frac{25}{100} = \frac{1}{4}$ ⟶ 1 : 4

02. 45% = ............................ ⟶ ..............................
03. 16% = ............................ ⟶ ..............................
04. 58% ............................ ⟶ ..............................
05. 32% = ............................ ⟶ ..............................
06. 120% = ............................ ⟶ ..............................
07. 2.25% = ............................ ⟶ ..............................
08. $3\frac{1}{3}\%$ = ............................ ⟶ ..............................
09. $12\frac{1}{3}\%$ = ............................ ⟶ ..............................

ஒரு அளவை அதன் முழுஅளவின் சதவீதமாகக் காட்டல்

உதாரணம் : 200g ஐ 4kg இன் சதவீதமாகத் தருக.

$\frac{200}{4000} = \frac{20}{400} = \frac{5}{100} = 5\%$

பயிற்சி

01. 25 cm ஐ 1m இன் சதவீதமாகத் தருக?
..............................................................................................................

02. 20 நிமிடத்தை 1மணித்தியாலத்தின் சதவீதமாகத் தருக?
..............................................................................................................

03. ஒரு வகுப்பிலுள்ள 50 பிள்ளைகளில் 30பேர் பெண்கள் எனில் பெண்களின் சதவீதம் யாது?
..............................................................................................................

04. புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக வாங்கிய 25 வெடிகளில் 5 வெடிகள் வெடிக்கவில்லை எனில் வெடித்த வெடிகளின் சதவீதம் யாது?
..............................................................................................................

05. தொழிலாளி ஒருவரது மாதச்சம்பளம் ரூபா 30000 ஆகும். அதில் ரூபா 21000 ஐச் செலவு செய்தபின் எஞ்சிய பணத்தைச் சேமிக்கின்றார் எனில் அவர் சேமிக்கும் பணத்தின் சதவீதம் யாது?
..............................................................................................................

ஒரு தொகையின் குறித்த சதவீதத்திற்குரிய அளவைக் காணல்

உதாரணம்

ரூபா 2000 இன் 18% எவ்வளவு?

$= 2000 \times \frac{18}{100}$

= 20 x 18

= 360 ரூபா

பயிற்சி

01. 300km இன் 20% எவ்வளவு?
..............................................................................................................

02. 4l எரிபொருளின் 15% எவ்வளவு?
..............................................................................................................

03. பாடசாலையொன்றிலிருந்த 600 மாணவர்களில் 35% ஆனோர் குறித்த தினமொன்றில் பாடசாலைக்கு வரவில்லை எனில் வருகை தராத மாணவர்கள் எத்தனை பேர்?
..............................................................................................................

04. இராமன் தனது ரூபா45000 மாதச்சம்பளத்தின் 8% ஐ போக்குவரத்திற்குச் செலவு செய்கிறான் எனில் போக்குவரத்துச் செலவு யாது?
..............................................................................................................

ஒரு சதவீதத்திற்குரிய அளவு தரப்படும்போது மொத்த அளவைக் காணல்

உதாரணம் :

ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களில் 12% ஆனோர் ஆண்களாவர். அங்குள்ள ஆண்களின் எண்ணிக்கை 36 எனில் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை

| | |
|---|---|
| 12% எண்ணிக்கை | = 36 |
| 1% எண்ணிக்கை | $= \frac{36}{12}$ |
| 100% எண்ணிக்கை | $= \frac{36}{12} \times 100$ |
| மொத்த எண்ணிக்கை | = 300 |

(07ஆம் பக்கம் பார்க்க)

ஆக்கம் - தாமினா சுபாகரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

# தூக்கில் தொங்கிய நிலையில் வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் வீதி ஓரத்தில் அமைந்திருந்த மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் நேற்று (புதன்கிழமை) காலை சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த பொதுமக்கள் இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தைக் கண்டெடுத்துள்ளனர். சம்பவத்தில் வவுனியா உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்தவரே சடலமாக கண் டெடுக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலி ஸார், மேலதிக விசாரணைகளையும் மு

# கொரோனாத் தடுப்பூசிகளின் நோய் எதிர்ப்பு நிலை என்ன?

## சஜித் கேள்வி

கொவிட் தடுப்பூசிகளின் நோயெதிர்ப்பு சக்தியின் நிலை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. எமது நாட்டில் செலுத்தப்படும் தடுப்பூசிகளின் தரம் என்ன என்பதை அரசாங்கம் தெரிவிக்கவேண்டும். அத்துடன் எதிர்வரும் சில வாரங்களில் நாட்டில் பாரிய கொவிட் அலை ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக விசேட வைத்திய நிபுணர் மலிக் பீரிஸ் விடுத்திருக்கும் எச்சரிக்கைக்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பினார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு -

நாட்டில் கடந்த சில வாரங்களாக கொவிட் வைரஸ் நோய்ப் பரவல், தொற்றாளர்கள் மற்றும் இறப்பு ஆகியவற்றின் பரவல் திடீரென அதிகரித்துள்ளது. இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அவசரப் பிரச்சினை என்பதால், பின்வரும் கேள்விகளுக்கு உறுதியான பதில்களையும் விளக்கங்களையும் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

விசேடமாக கடந்த சில வாரங்களில் கொவிட் நோய்த்தொற்றாளர்கள், தீவிர நோய்வாய்ப்பட்ட நோயாளிகள் மற்றும் இறப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டில் மேலுமொரு கொவிட் அலை உருவாகி வருவதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? மேலும் கடந்த 10 நாள்களில் பதிவான கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை, கொவிட் இறப்புகளின் எண்ணிக்கை, பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கை மற்றும் வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் பொதுப் பிரிவுகளில் சிகிச்சை அளிக்கப்படும் கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை ஆகியவை இந்த சபைக்கு வழங்கப்படுமா?

இதுவரை உலகம் முழுவதும் அடையாளம் காணப்பட்ட கொவிட் வகைகள் என்ன? அவற்றில் இந்நாட்டில் இனங்காணப்பட்ட வகைகள் யாவை? என்பதைத் தெரிவிக்க முடியுமா?. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொவிஷீல்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி, சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசி, ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக் வி, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பைஸர் மற்றும் மொடர்னா தடுப்பூசி என்றவாறு தற்போது இலங்கையில் வழங்கப்படும் ஐந்து தடுப்பூசிகளினதும் செயற்திறன் என்ன?

அத்துடன் மற்றொரு கொவிட் அலை உருவாகும் சூழலில் கொவிட் பரவுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட விதிமுறைகளை தளர்த்துவது பொருத்தமானதா? என்பதைத் தெரிவிக்க வேண்டும். குறிப்பாக பஸ்கள் மற்றும் ரயில்களில் பயணிகள் சமூக இடைவெளியைப் பேணுவது தொடர்பில் தங்களுக்கு பொறுப்பேற்க முடியாது என சுகாதார பணிமனையின் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்திருக்கின்றார். அவரின் இந்தக் கூற்றை அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்றதா? மேலும், எதிர்வரும் சில வாரங்களில் நாட்டில் பாரிய கொவிட் அலை ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக வைரஸ் தொடர்பான முன்னணி விசேட வைத்திய நிபுணர் மலிக் பீரிஸ் பயங்கரமான எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார். இது தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன? போன்ற முக்கிய பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | கணிதம் | அலகு 18

### சதவீதம்

பயிற்சி:

01. ஒருவரது மாதச்சம்பளத்தின் 30% ஆனது ரூபா8400 எனில் அவரது சம்பளம் யாது?

..........................................................................................................

02. ஒரு மழை நாளில் பாடசாலை ஒன்றில் பிள்ளைகளின் வரவு 60% ஆக இருந்தபோது அன்று வருகை தந்திருந்த பிள்ளைகளின் எண்ணிக்கை 420 எனில் பாடசாலையிலுள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................................................

03. இரும்பு, நாகம் கலக்கப்பட்ட ஓர் உலோகக் கலவையில் 64% நாகம் ஆகவும் இரும்பின் திணிவு 180g ஆகவுமிருப்பின் கலப்பு உலோகத்தின் திணிவு யாது?

..........................................................................................................

05. ஒருவரிடமிருந்த பணத்தின் 65% ஐச் செலவு செய்த பின் அவரிடம் ரூபா1400 எஞ்சியிருந்தது எனில் அவரிடமிருந்த மொத்தப்பணம் யாது?

..........................................................................................................

**ஆக்கம் - தாமினா சுபாகரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | கணிதம் | அலகு 19


### பைதகரசின் தொடர்பு - விடைகள்

(01)
01. 5cm
02. $\sqrt{130}$ = 11.40cm
03. 12cm
04. 5 3cm = 8.66cm


(02)
01. $6\sqrt{2}$ = 8.485
02. $\sqrt{194}$ = 12.928
03. $10\sqrt{3}$ = 17.32
04. $3\sqrt{19}$ = 13.07
05. $\sqrt{133}$ = 11.53
06. $\sqrt{425}$ = 21.56
07. $\sqrt{161}$ = 12.68
08. $4\sqrt{13}$ = 14.42
09. $5\sqrt{11}$ = 16.58
10. $3\sqrt{29}$ = 16.15

(03)
01. $\sqrt{161}$ = 12.68cm
02. $1\sqrt{14629}$ = 1.2cm
03. 12cm
04. $\sqrt{319}$ = 17.86cm
05. 6.3cm
06. 12cm
07. $6\sqrt{3}$ = 10.39
08. $2\sqrt{146}$ = 24.16cm
09. 1.32


(04)
01. 34 cm
02. $3\sqrt{34}$ + 24 = 41.49cm
03. 60cm
04. 26cm
05. 18 = x
80cm

(05)




= 4 x 10
= 40cm




$2X^2 + x^2 = 144$
$2X^2 = 144$
$X^2 = 72$
ABCD பரப்பு = $72cm^2$




$BC^2 = 25^2 - 24^2$
BC = $\sqrt{49}$
BC = 7cm
ABCD பரப்பு = 24 x 7
= $168cm^2$




$13^2 + 5^2 = h^2$
$194 = h^2$
h = $\sqrt{194}$
h = 13.92m

**ஆக்கம் - தாமினா சுபாகரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | கணிதம் | அலகு 19

### நேர்கோட்டுச் சமன்பாடுகள் - விடைகள்

பயிற்சி

01. m = 1, c = 7
02. m = 3, c = -1
03. m = -2, c = -5
04. $m = \frac{1}{3}$, c = 1
05. m = -6, $c = \frac{-2}{3}$
06. m = -3, c = -7
07. $m = \frac{3}{2}$, c = -2
08. $m = \frac{3}{5}$, c = -3
09. m = -2, c = 3
10. m = 3, c = 0

y = mx வடிவிலான நேர்கோட்டு சமன்பாடுகளின் வரைபை வரைதல்

பயிற்சி

01. பொருத்தமான வரைபை வரைதல்

02. பொருத்தமான வரைபை வரைதல்

வரைவிலிருந்து படித்திறன் வெட்டுத்துண்டு காணல்

பயிற்சி

01. m = 1
C = 4
சமன்பாடு = y = x + 4

02. m = -2
C = 8
சமன்பாடு = y = - 2x + 8

03. $m = \frac{2}{3}$
C = 2
சமன்பாடு = $y = \frac{2x}{3} + 2$

**ஆக்கம் - தாமினா சுபாகரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம்
89

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

மிலிந்த மொறகொடவின் பாதை தேடும் நிறுவனம் **(Path Finder Foundation)**பல விதங்களில் விசித்திரமானது. பல வர்ணங்களும், வடிவங்களும் வாய்ந்தது. இது அரசியல் சார்பற்ற பொதுத் தொண்டு நிறுவனமாகவும் வருமானத்தை எதிர்பார்க்காத பொதுப்பணி நிறுவனமாகவும் மூலோபாயங்கள் உருவாக்கத்துக்கு ஆராய்ச்சிகளை மையமாகக் கொண்டதாகவும் பிரசாரப்படுத்தப்பட்டது.

ஆனால் மூலோபாயங்கள் உருவாக்குவதற்கு இயங்கிய தளங்கள் எல்லாமே கேந்திர அரசியல் கலப்பு நிறைந்தவை. அரசாங்கங்கள் தங்களின் தீர்மானங்களை முன்னெடுக்க அவற்றை எப்படி நகர்த்தலாம், ஸ்ரீலங்காவின் பொருளாதார வளர்ச்சிக்கு எந்த விதமான நடவடிக்கைகள் தேவையாகலாம், அதற்கான உத்திகள் யாவை என்பன ஆராயப்பட்டன.

2003இல் தோற்றம் பெற்ற இந்த அமைப்பு மஹிந்தவின் பின்னணியில் அபரிமித வளர்ச்சி கண்டது. இந்தியா –ஸ்ரீலங்கா முயற்சிகள் நிலையம் **(Indo - SriLanka Initiative Center )**, சீனா – ஸ்ரீலங்கா கூட்டுறவு படிப்புக்கள் நிலையம் **(China - SriLanka Co - operative Studies Center)**, திருகோணமலை வளர்ச்சி திட்டங்களுக்கான இந்திய ஸ்ரீலங்கா ஜப்பானின் கூட்டுறவு என்ற வர்த்தகங்கள் சார்ந்த அமைப்புக்கள் என பல எழுந்தன. அவை கடல் பரப்பின் வளங்கள், அவற்றின் ஆளுமைகள், ஆதிக்கங்கள் என்பவற்றின் ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டன். முக்கியமாக வங்கள விரிகுடாவை ஒட்டிய மூலோபாய திறனாய்வுகளில் ஈடுபட்டன.

இந்தத் தொண்டு நிறுவனமே 'மஹிந்தவின் சிந்தனை'களையும் திட்டங்களையும் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் ஏற்றுக்கொள்ள கூடியதான அடிப்படை உத்திகளை அமைத்தது.

ஜே.ஆர். 1982 – 1983ஆம் ஆண்டுகளில் பயங்கரவாதத்தை ஒழிக்க அமெரிக்காவிடம் ஆயுதங்களும் ஆதரவும் தேடினார். இந்திராகாந்தி இருந்தாலும், தாலிபான்கள், அல்குலைதா என்பவை தோன்றினாலும், அப்போது அவை பலமாக இல்லாததாலும், அந்த ஆத ரவு வழங்கப்படவில்லை. ஆனால் இம்முறை அல்வையும் தடாலிபான்களை கட்டுப்படுத்த கஷ்டப்படும் அமெரிக்காவுக்கு, ஓங்கி வரும் சீனாவின் வர்த்தகத்தை காட்டி பயங்கரவாத ஒழிப்புக்கு இந்த 'பாதை தேடும் நிறுவனத்தின்' மூலமாக மஹிந்த ஆலாபரணங்கள் வைத்தார்.

இந்தியாவும் கூட சீனாவை ஒட்டி அதே நிலையில் தான் இருக்கிறது. ஆதலால் இந்தியாவும் அமெரிக்காவும் ஒத்த ஒரு நிலையில் நின்று ஸ்ரீலங்காவின் வளர்ச்சிக்கு ஆப்பு வைக்கும் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற வாதங்கள் எடுபட்டன. பயங்கரவாதம் அழிக்கப்பட்டுவிட்டால் ஸ்ரீலங்கா சீனாவின் பக்கம் முழுவதுமாக சாய்வதை மட்டுப்படுத்தி, அமெரிக்கா மற்றும் மேலை நாடுகளின் வர்த்தகத்தை மஹிந்தவின் அரசு முன்னெடுக்கும் என்று தரப்பட்ட உறுதிகளோடும் மிலிந்த மொறகொடவின் எண்ணைகளும் திண்ணைகளும் படிப்படியாக பயன் தந்து 2006 வரையில் அமெரிக்கா, ஸ்ரீலங்காவுக்கு பயங்கரவாத ஒழிப்புக்கு நேரடி ஆதரவு தருவதென்ற அரசியல் நிலைப்பாட்டை மேற்கொண்டது. அவற்றின் அடிப்படையில் 2006இல் மிலிந்த மொறகொடவின் அனுசரணையின் ரொபேர்ட் பிளேக் அமெரிக்கத் தூதுவராக ஸ்ரீலங்காவிற்கு நியமனம் பெற்றார்.

தமிழ் புலம் பெயர் அமைப்புகளோ அன்றில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களோ அவற்றை எவ்வளவு தூரம் கணக்கெடுத்தார்கள் என்பது தெளிவில்லை.



சுடர்ஒளி அலுவலகத்தில் உதயன் நிர்வாகிகளுடன் பேச்சு நடத்தும் அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபோர்ட் ஓ பிளேக்.



மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் சீனப் பிரதமருடன் மிலிந்த மொறகொட.

மிலிந்த மொறகொட தமது 'பாதைகள் தேடும் நிறுவனத்தின்' மூலம் பாம்புகள் குடியிருக்கப் புற்றுகள் தேட, வழமைபோல தமிழ் பரப்புகள், பத்திரிகைகளில் ஸ்ரீலங்கா அரசு வெளியிடும் செய்திகளுக்கு எதிர்வாதங்கள் செய்தனவே ஒளிய, அமெரிக்காவைக் கட்டுப்படுத்தி, தடம் புரளாதிருக்க செய்யக்கூடிய செயல்திறன் அந்நாட்டில் இயங்கிய அவர்களால் ஒப்பேற்ற முடியவில்லை.

**267. இந்த மிலிந்த மொறகொடதானே இப்பொழுது இலங்கை தூதுவராக இந்தியா?**

ஆம். கோட்டாபய ஜனாதிபதியானதும், மிலிந்த மொறகொடவை தூதுவராக சென்ற வருடமே ஒகஸ்ட் 20இல் நியமித்தார். ஆனால் அதனை இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை. நிராகரிக்கவும் இல்லை. இப்பொழுது இந்தியாவிற்கு ஏற்புடையதான பல வர்த்தக திட்டங்களோடும் கலாசார விழுமியங்களைப் பேணுவதற்கான முனைப்புளோடும் போகிறார் – ஒகஸ்ட் 20இல் இருந்து. இன்று வரை ஏற்றுக் கொள்ளப்படாமிலிருந்த தூதுவர் நியமனம் ஏற்றுக் கொள்ளப்பட்டு போகிறார் என்றால் இவற்றின் பின்னணிகள் என்ன? அவரது வர்த்தக திட்டங்கள் மற்ற ஊடகங்களை முந்தி இந்தியாவின் ''ஹிந்து' பத்திரிகையில் முதன்மைப்படுத்தபட்டால் அதன் காரணங்கள் எவையாகலாம்?

பஸில் ராஜபக்ஷ அமெரிக்கா சென்று திரும்பி, அமெரிக்க சார்பில் திருப்பங்கள் மேற்கொள்ள முனையும் போது, காத்துக் கிடந்த இந்த இந்திய தூதுவர் நியமனம் ஒப்பேறுவதிலும் ஏதும் இணைக்கப்பாடுகள் உள்ளனவா? தமிழ் மக்களை பொறுத்தவரை இவற்றின் தாக்கங்கள் என்ன?

இவை உணர்வு பூர்வமாக மட்டுமில்லாமல் அறிவு பூர்வமாகவும் அரசியல் நீதிகளின் யதார்தங்களிலும் ஆராயப்பட்டு முன்னேற வேண்டும்.

நான் நண்பனாக பார்பவன், எனது எதிரியின் மூக்கை அறுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் இன்றைய புவியியல் சூழ்நிலையில் எடுபடாதது என்றத் புரிந்துணர்வு வேண்டும்.

**268. ரொபேர்ட் பிளேக்கின் அந்த நியமனம் முக்கியமானதா?**

அவர் தூதுவராக இருந்த 2006 - 2009 ஆன காலகட்டத்துக்கு அவர் தற்செயலாக வந்து சேர்ந்தவரல்லர். மிலிந்த மொறகொடவின் பாதை தேடும் நிறுவனத்தின் பாலமாக ஸ்ரீலங்கா – அமெரிக்கா – இந்தியாவுக்கிடையே நிறுவப்பட்டவர். இவர் ஸ்ரீலங்காவுக்கு 2006இல் வரும்வரையில் இந்திய தூதரகத்தில் பணி செய்து கொண்டிருந்தமையால் இந்திய ராஜதந்திர வட்டாரங்களில் நல்ல உறவுகளை வைத்திருந்து, அவற்றை வர்த்தக ரீதியாகவும் வளர்த்து கொண்டவர். மிலிந்த மொறகொடவின் பாதை தேடும் நிறுவனங்களின் ஆராய்ச்சிகளின்படி ஸ்ரீலங்கா இந்திய சமுத்திரத்தில் ஒரு சிறிய தீவானாலும் அதனது கேந்திர முக்கியதுவத்தால் அமெரிக்கா, மேலைத் தேய நாடுகள், இந்தியா, சீனா, ரஷ்யாவாகிய எல்லா நாடுகளிடமும் பேரம் பேசக் கூடிய நிலையில் இருக்கிறது. ஆகவே அந்த நாடுகள், இந்தியக் கடலில் அனுசரணை அடைவதாகில் ஸ்ரீலங்காவை அனுசரித்துப் போகவேண்டும். அதேசமயம் ஸ்ரீலங்காவும் ஒரு பக்கத்தை சாராது எல்லோருக்கும் தேவைக்கு ஏற்ப அனுசரணைகளைக் கொடுத்து தனது பலத்தை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர். அவரது நோக்கு ஸ்ரீலங்கா கேட்கும் அனுசரணையை தந்து அமெரிக்காவின் நலன்களை இந்து மகாசமுத்திரத்தில் தக்க வைத்து உறுதிப்படுத்துவதுதான்.

ஸ்ரீலங்கா அதற்காக கேட்ட அனுசரணை விடுதலைப் புலிகளின் போராட்டம், பயங்கரவாதமாக்கப்பட்டு அதனை அழிக்க நேரடியான ஆதரவு தரவேண்டும் என்பது. அதற்கு இணங்கி நேரடியான ஆயுத உதவி களுக்கும் வேறு மறைமுக உதவிகளுக்கும் அமெரிக்க திணைக்களங்களையும் நிறுவனாங்களையும் சீர்படுத்தினார். அவற்றில் ஏற்படுத்த பட்ட முக்கிய ஏற்பாடு "சாகரபலய" (கடலின் பலவான்) என்ற மறைமுக பதத்தின் கீழ், இலங்கை இராணுவத்துக்கும் இந்திய கடற்படைக்கும் தகவல்கள் தந்து, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களும் மற்ற பொருள்களும் கொண்டு வந்த அவர்களது கப்பல்களை ஆஸ்திரேலியா, இந்தோனேசியா கடல் எல்லைகளைத் தாண்டியவுடன் அழித்ததுதான். அவர் வந்ததிலிருந்து 30 மாதத்துக்கு மேல் இந்தத் தகவல்கள் தரப்பட்டு விடுதலைப் புலிகளின் முதுகெலும்பாயிருந்த கடலின் ஆளுமை முறிக்கப்பட்டது. அவர்களது கப்பல்கள் எவ்வாறு தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன என்ற மர்மங்களும் வெளிவந்தன. அதேசமயம் மற்றைய நாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள் தொடர்பில் கடைப்பிடிக்க எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டு மரபுகள் இவரைப் பொறுத்தவரையில் கடைப்பிடிக்க கட்டுப் படுத்தப்படவில்லை.

**269. அவை ஏன்?**

அவர் தூதுவராக வந்த புரிந்துணர்வு. வெளிவிவகார அமைச்சின் அனுமதியுடன்தான் அல்லது அவர்களுக்கு அறிவித்துவிட்டு தான் வெளிநாட்டுத் தூதுவர்கள் நாட்டின் மற்ற பகுதிகளுக்கு செல்லவேண்டும் அல்லது ஏதாவது சந்திப்புக்களை ஏற்படுத்தலாம் என்ற பழக்க வழக்கத்தில் இருந்த சர்வதேச மரபுகள் எல்லாம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தங்கள் இல்லாமல் அவர் சொந்தமாக கணிப்பின்படி ஊடாட விடப்பட்டார். எந்தப் பகுதியிலும் யாரை வேண்டுமானாலும் சந்திக்க கூடியவராக அவர் இருந்தார். அப்படியே தமிழ்ப் பகுதிகளுக்கும் யாழ்ப்பாணத்திலும் கூட சென்று முக்கியமானவர்களைச் சந்தித்தார்.

அதில் ஒன்று உதயன் ஆசிரிய பீடத்துடன் நடந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இயங்கும் உதயன் பத்திரிகைக்குத் தேவையான நியூஸ்பிரிண்டை கப்பல்களில் கொண்டு செல்வதற்கான இட ஒதுக்கீடு வழங்குவதற்கு கொழும்பு மறுத்தபோது, அதுபற்றி உதயனின் கொழும்பு அலுவலகத்துக்கு நேரடியாக அமெரிக்க தூதுவர் சென்று உதயன்,சுடர் ஒளி நிர்வாகிகளைச் சந்தித்து அது பற்றி பேசினார். அதனை அடுத்து யாழ்ப்பாண பத்திரிகைக்கு நியூஸ்பிரிண்டைஎடுத்துச்செல்ல விதிக்கப்பட்ட கெடுபிடி கொழுப்பினால் தளர்த்தப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை அரசின் அழுத்தம் பற்றி குற்றம் சொன்ன போது அதைத் தளர்த்தி சீரான நிலைமையை ஏற்படுத்த அவர் விஜயம் செய்தார் எனக் கூறப்பட்டது.


ஆனாலும் அவர் அப்படியாக வேறு சிலரையும் சந்தித்து அபிப்பிராயங்களையும் கருத்துக்கணிப்பு களையும் எடுத்தார்.

இவற்றின் அடிப்படையில் தென் பகுதியிலும் அரசாங்கத்திலும் ஜி.எல்.பீரிஸிலும் பார்க்க மிலிந்த மொறகொடவே பலம் வாய்ந்தவராகவும் காரியங்களைச் சாதிக்கக் கூடியவராகவும் இருக்கிறார் என்றும், அங்கு (கொழும்பில்) நோர்வேயின் மேலிருந்த காழ்ப்புணர்வு பற்றியும் தமது மேலிடத்துக்கு அறிவித்தார் பிளேக்.

(வளரும்...)



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!




(வே.வரதசுந்தரம்)

**அவதார தெய்வம் எங்கள் அற்புத சாயி!**
**அன்னை குருபிதாவாகி ஆதரிக்கும் சாயி!**
**அன்பே செங்கோலாய் ஆட்சிசெய்யும் சாயி!**
**அண்டி வந்தோர்க்கு அருள்செய்யும் சாயி!**
**கர்மவினை போக்கிடும் உன்பாத தரிசனம்!**
**நின்கர அசைவினால் கிடைக்கும் பாவவமோசனம்!**
**இன்பம் வந்திடும் உன்திரு நாமத்தால!**
**துன்பமெல்லாம் அகன்றிடும் உன்திருப்பார்வையால்!**

சாயிபக்தை இந்திராணி மகேந்திரன் இயற்றிய இப்பாடலைப் பாடிய சாயிபக்தர்கள் கொழும்பு ஸ்ரீசத்ய சாயிபாபா மத்திய நிலையத்தில் நிகழ்ந்த அற்புதத்தைச் செவிசாய்க்கின்றனர். சுபாஷினி – கௌசிகன் தம்பதியினர் தம்மாணவப் பருவந்தொட்டு இன்றுவரை பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா பக்தர்களாக வாழ்ந்து வருபவர்கள். கொழும்பு ஸ்ரீசத்ய சாயிபாபா மத்திய நிலையத்தின் சமய, சமூகப் பணிகளில் குடும்பமாக ஈடுபட்டு வருபவர்கள்.

சாயிபக்தையான சுபாஷினிகௌசிகன் தொழில்சார் துறையில் தானனுபவித்த சாயி அனுபவத்தைக் கூறுவது கேட்போமா!

‘இன்று சாயி நிலையத்தை நிமிர்ந்து பார்க்கும் போது பெரும் பிரமிப்பாகவும் ஆனந்தமாகவும் இருக்கிறது. இப்படியான ஒரு நிலையத்தில் என் சேவையும் ஒரு பங்காக இருக்கின்றது என்பதை என்னால் நம்ப முடியவில்லை. இது எப்படி நடந்தது? நினைத்து நினைத்துப் பார்க்கிறேன். நான் ஒரு கருவி மட்டும்தான். என்னைக் கருவியாய்க் கொண்டு காரியத்தைச் செய்து முடித்தவர் சாயிதான்.

நானும் எனது கணவரும் பாலவிகாஷ் படிக்கும் காலம் தொடங்கி இன்றுவரை இச்சாயி இல்லத்தை சார்ந்துதான் வளர்ந்துள்ளோம். நாங்கள் பாபாவின் பிறந்த நாள்களுக்கு அழகழகாக் கோலம் போடுவோம். புட்டபர்த்தியில் உள்ள கட்டடங்களை கேக்கில் அழகாகச் செய்து, பிறந்த நாள் பாட்டுப்பாடி வெட்டிக் குதூகலிப்போம். இதையெல்லாம் அன்றைய தலைவரும் மறைந்தும் மறையாது இன்றும் வழிகாட்டும் திரு. சிவநாயகம் ஐயா அவர்கள் மிகவும் பாராட்டி மகிழ்வார்.

இப்படித்தான் ஒரு முறை பிறந்தநாள் கேக்கைப் பாராட்டி பேசிவிட்டு வந்த சிவநாயகம் ஐயா ‘சுபா நாம் பகவானுக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டும். அதற்கு ஒரு முகப்படம் வரைந்து தா’ என்று கூறினார். நானும் பலவாறு யோசித்து ஒரு படம் தயாரித்து வரைந்து கொடுத்தேன். ‘பிரமாதம், பிரமாதம்’ என்று கூறி என்னைப் புகழ்ந்து பாராட்டினார் அவர்.

ஆனால் அவர் காலத்தில் கட்டடம் கட்ட பல இடங்கள் தேடினார். ஒன்றும் சரியாகப் பொருந்தி வரவில்லை. அவர் மறைவுக்குப்பின் 2000ஆம் ஆண்டு புதிய தலைவராகவந்தஎஸ்.என்.உதயநாயகன்தலைமையில் ஓர் இடம் வாங்கி, கட்டடம் கட்டும் முயற்சி கைகூடியது. இதற்கு சுவாமியின் அனுமதியும், ஆசியும் கிடைத்தது. பகவான் அருளால் ஒரு பழைய வீடு வாங்கப்பட்டு ‘சாயி இல்லம்’ என்ற பெயரில், அங்கு ஒரு வருடகாலம் வரை சாயி பஜனைகள், கலந்துரையாடல் வகுப்புகள், தியான வகுப்புகள், இலவச மருத்துவ சேவைகள் முதலியன நடத்தப்பட்டு வந்தன.

ஒரு நாள் எமது தலைவரின் நண்பரும், அப்போது கனடா நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தவருமான சாயி பிரபாகரன் துணையோடு திரு.சிவா செல்வரட்ணம் எமது நிலையத்திற்கு வருகை தந்தார். இங்கு வந்த திரு.சிவா செல்வரட்ணம் எமது இடத்தை பார்த்துவிட்டு, இந்த இடத்தில் ஒரு பெரிய சாயி கோயில் கட்டவேண்டும் என்றார். அத்துடன் அதன் முழுப்பொறுப்பையும் தானேயேற்றுக் கொள்வதாகவும் கூறினார். இந்தக் காலகட்டத்தில் இப்படி ஒருவர் வந்து கூறினால் அது நிச்சயம் சுவாமியின் ஏற்பாடாகத்தான் இருக்கமுடியும் என்று கருத்திற்கொண்டு, அதற்கான நடவடிக்கைகளை எமது செயற்குழு முன்னெடுத்தது.

திரு.சிவா செல்வரட்ணம் அவர்கள், எமது கோவிலுக்கான வரைபடம் ஒன்றை வரைந்து தரும்படி எமது தலைவரிடம் கேட்டார். தலைவர் என்னைக் கூப்பிட்டு ‘நீங்கள் சாயி கோவிலுக்கான ஒரு வரைபடம் ஒன்றை வரைந்து தாருங்கள்’ என்றார். தலைவருக்குத் தெரிந்த எத்தனையோ பெரிய பெரிய கட்டட வரைபட நிபுணர்கள் இருக்க, என்னை ஏன் தெரிந்து எடுத்தார்? இது பகவானுடைய சித்தமாக இருக்க வேண்டும். முன்பே மறைந்த தலைவர் திரு.சிவநாயகம் ஐயா மூலம் பகவான் என் முகப்புப் படத்தைப் பாராட்டியுள்ளார். ஆகவே இது பகவான் திட்டம்தான் என்று நினைத்தேன்.

நான் எனதுதொழில் சம்பந்தமாகப் பல்வேறு கட்டடங்களுக்கு வரைபடம் வரைந்திருந்தாலும், ஒருசாயி கோயிலுக்கு வரைபடம் வரைவது இதுதான் முதல் முறை. இப்படியான ஒரு ‘சாயிசேவை’ எனக்குக் கிடைத்ததையிட்டு, பகவானுக்கு நன்றி கூறி, ‘சுவாமியே என்னுடன் இருந்து இந்தக் காரியத்தை நடாத்தித் தாருங்கள்’ என்று பிரார்த்தித்துக் கொண்டு என் வேலையைத் தொடங்கினேன்.

ஒருவாரத்தில் படம் வரைந்து தலைவரிடமும், திரு சிவாசெல்வரட்ணத்திடமும் கொடுத்தேன். ஒரு பிரதி சுவாமியின் ஆசிக்காகப் புட்டபர்த்திக்கும்,இன்னுமொரு பிரதி கொழும்பு மாநகரசபையிலுள்ள கட்டட நிர்மாணப் பகுதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த வரைபடத்தை பகவானிடம் எடுத்துச் சென்ற எமது உபதலைவர் கே.கணேசானந்தன் புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையத்தில் சுவாமியின் ஆசிக்காகவும், தரிசனத்திற்காகவும் நான்காவது வரிசையில் அமர்ந்திருந்தார். சுவாமியிடம் வரைபடத்தை சமர்ப்பித்து ஆசி




பெற்றுவிட வேண்டும் என்ற உத்வேகத்தில் பிரார்த்தனை செய்தபடி இருந்தார்.

அப்போது சுவாமி அங்கு நடந்து வந்தார். உடனே திரு. கணேசானந்தன் எழுந்து ‘சுவாமி! இது கொழும்பில் கட்டப்பட இருக்கும் சாயிகோயிலின் வரைபடம். தங்கள் ஆசிவேண்டும்!’ என்று கூறினார்.

உடனே சுவாமி சற்று நின்றுவிட்டு, புன்னகை புரிந்தபடி, தன்கையை நீட்டி அந்தப் படத்தைப் பெற்றுக் கொண்டதுடன் விரித்தும் பார்த்தார். பின்தன் ஆள்காட்டி விரலால் அந்தப் படத்தின் மீது ஏதோ எழுதினார். அவ்வாறு ஆசிதந்து, வரைபடத்தைத் திருப்பி திரு. கணேசானந்தனிடம் கொடுத்தார்.

இங்கு கொழும்பு மாநகரசபையிலுள்ள கட்டட நிர்மாணசபையின் சில திருத்தங்களுடன் இந்த வரைபடம் ஒருசிலமாற்றங்களுடன் எமது நம்பிக்கைச் சபையின் உறுப்பினரான கே.பி.பாலநாயகத்தின் உதவியுடன் கொழும்பு மேயரும் சாயிபக்தருமான கௌரவ பிரசன்னா குணவர்த்தனாவின் கையெழுத்துடன் ஒருவாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு, மேமாதம் 15 ஆம் நாளன்று அடிக்கல் நாட்டுவைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் கலந்துகொள்ள, ஜிந்துப்பட்டி சிவசுப்பிரமணிய சுவாமிகோயில் குருக்களுடன் வந்திருந்த, அந்தக் கோயிலின் தலைவர் சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழகத்தைச் சார்ந்த வாஸ்து சாஸ்திர நிபுணரான திரு. ஆவுடையப்பனையும் அழைத்து வந்திருந்தார். அங்கு வந்த அந்த நிபுணர் எங்கள் தலைவரிடம் வரைபடத்தை பார்க்கக் கேட்டார். தலைவருக்குச் சங்கடமாகப் போய்விட்டது. இவ்வரைபடம் வாஸ்து முறைப்படி வரையப்படவில்லை. அத்துடன் பகவானிடம் காட்டி ஆசீர்வாதமும், அங்கீகாரமும் பெற்றாகிவிட்டது. இப்போது இவர் வாஸ்து முறையில் மாற்றம் செய்ய விரும்பினால் என்னசெய்வது? எல்லாம் பகவான் செயல் என்று எண்ணிக் கொண்டு வரைபடத்தைத் தலைவர் அவரிடம் கொடுத்தார்.

அந்த வாஸ்து நிபுணர் ஆவுடையப்பன் அவர்கள் வரைபடத்தை நன்றாகப் பரிசீலித்துப் பார்த்துவிட்டு எங்கள் தலைவரிடம், ‘இந்த இடம் ஒருகோவிலுக்கு பொருத்தமானது. அத்தனை திசைகளும் சரியாக அமைந்துள்ளன. இந்த வரைபடம் வாஸ்து முறைப்படி வரையப்பட்டுள்ளது. வாஸ்து சாஸ்திரப்படி அத்தனை பொருத்தங்களும் உள்ளன. இதனை வரைந்தவர் நிச்சயம் வாஸ்து சாஸ்திரத்தில் புலமைபெற்றவராக இருக்க வேண்டும்’ என்று தலைவரிடம் கூறினார்.

இந்த விடயங்களை என்னிடம் கூறிய தலைவர் ‘நீங்கள் வாஸ்து முறைப்படி வரையவும் படித்திருக்கிறீர்களா?’ என்று கேட்டார்.

அதற்கு நான் ‘உண்மையில் வாஸ்து சாஸ்திரம் பற்றி எனக்கு எவ்வித அறிவும் இல்லை. சுவாமியை மனதில் இருத்தித்தான், பிரார்த்தித்துத்தான் இந்தப் படங்களை நான்வரைந்தேன்’என்று நான் பணிவுடன் கூறினேன்.

இதைக் கேட்ட தலைவர் ‘இது தான் சுவாமியின் அற்புதலீலை. சுவாமியின் அருளால், உங்களையும் அறியாமல் வாஸ்து முறைப்படி வரைபடம் அமைந்துள்ளது’ என்று கூறினார். இதைக்கேட்டதும் நான் ஆனந்தமும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

நாங்கள் ‘கருவி’ மட்டுமே. நாம் ‘ஓர் அடி’ எடுத்து முன்னால் வைக்கும்போது, சுவாமி ‘பலஅடிகள்’ எடுத்து எம்மை நோக்கி வருகின்றார். எம்மை ஆட்டுவிப்பது சுவாமிதான் என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன்.

# யாழ். ஆயர் இல்லத்தின் காணிகள் முல்லை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பு

முல்லைத்தீவு மாவட்டம் சிலாவத்தைப் பகுதியில் உள்ள யாழ்.மறைமாவட்ட ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான சுவாமி தோட்டக்காணியில் குடியிருக்கும் மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ் ஆயர் இல்லத்தில் சுவாமி தோட்டத்துக்குச் சொந்தமான தியோகு நகர் பகுதியில் ஏறத்தாழ 95 குடும்பங்கள், முதியோர் சங்கம், முன்பள்ளி, சைவ ஆலயம், பொது நோக்கு மண்டபம் என்பன அடங்கிய தியோகு நகர் எனும் கிராமம் அமைந்துள்ளது.

இந்தக் கிராமத்தில் உள்ள மக்களுக்கும், அமைப்புகளுக்கும் சைவ ஆலயத்துக்குமாக யாழ். கத்தோலிக்க திரு அவைக்குரிய காணியை யாழ்ப்பாணம் கத்தோலிக்க ஆயர் பேரருட்திரு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பகிர்ந்தளித்துள்ளார்.


குறித்த தியோகு நகர் எனும் கிராம மக்களுக்குக் காணி வழங்கும் நடவடிக்கையில், முதற் கட்டமாக 50 உரிமங்கள், நன்கொடை உறுதிகளாக மக்களுக்கு வழங்கப்பட்டன. அவற்றை யாழ் மறைமாவட்ட ஆயரின் பெயரால், மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் மக்களுக்கு கையளித்தார்.

இந்நிகழ்வு நாட்டில் உள்ள கொவிட் 19 சுகாதார வழிகாட்டலுடன் தியோகு நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு இடம்பெற்றிருந்தது.



# முகத்தைப் பகைத்து மூக்கை வெட்டும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது அரசு!

## நாடாளுமன்றில் நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. காட்டம்



சீன கம்யூனிஸக் கட்சியின் 100 ஆவது வருடத்தை முன்னிட்டு நாங்கள் தங்க நாணயங்களை வெளியிட்டோம். ஏற்கனவே பல நிறுவனங்களின் முன் ஆங்கில, தமிழ் ஏன் சிங்கள மொழி கூடப் பாவிக்கப்படாமல் சீன மொழியில் மட்டும் பெயர்ப்பலகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஒரு வேளை எமக்கு நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து தான் இவ்வாறான செயல்களில் நாம் ஈடுபடுகின்றோமோ நான் அறியேன். இவ்வாறான நடவடிக்கைகள் பூகோள அரசியலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன என்பது பற்றி சிந்தித்தோமா? முகத்தைப் பகைத்து மூக்கை வெட்டும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் காட்டத்துடன் தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன்.

அவரது நாடாளுமன்ற உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

எமது கடன்களை காலத்திற்குக் காலம் இடைவிடாமல் திருப்பி செலுத்திவந்த நாங்கள் அந்த நற்பெருக்கு இழுக்கை ஏற்படுத்தும் விதமாக வாயிற்படியில் காலூன்றி நிற்கின்றோம். ஏதாவது ஒரு சர்வதேசக் கடனை உரியவாறு உரிய நேரத்தில் செலுத்தாது விட்டால் அது மற்றைய சகல கடன்களையும் பாதிக்கும். அவ்வாறு நடந்தால், அது மிகப் பெரிய ஆபத்தாக உருவெடுக்கும்.

எமது கடன்காரர்கள் யாவரும் உடனே தமது கடன்களை முழுமையாக நாங்கள் திருப்பிக் கட்ட வேண்டும் என்று கேட்பார்கள். அதே நேரத்தில் அவற்றைச் செலுத்தாதுவிட்டால் எம்மால் வேறு கடன்களைப் பெற முடியாத ஓர் ஆபத்து நிலை ஏற்படும். உண்மையில் எமக்குக் கடன்தர எவரும் முன்வர மாட்டார்கள். சீனா போன்ற ஒருநாட்டின் அடிமை நாடாகவன்றி எம்மால் தனித்தியங்க முடியாமல் போய்விடும்.

சீன கம்யூனிஸக் கட்சியின் 100 ஆவது வருடத்தை முன்னிட்டு நாங்கள் தங்க நாணயங்களை வெளிக் கொண்டு வருகின்றோம். ஏற்கனவே பல நிறுவனங்களின் முன் ஆங்கில, தமிழ் ஏன் சிங்கள மொழி கூடப் பாவிக்கப்படாமல் சீன மொழியில் மட்டும் பெயர்ப்பலகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஒரு வேளை எமக்கு நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து தான் இவ்வாறான செயல்களில் நாம் ஈடுபடுகின்றோமோ நான் அறியேன்.

ஆனால் இவ்வாறான நடவடிக்கைகள் பூகோள அரசியலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன என்பது பற்றி சிந்தித்தோமா? முகத்தைப் பகைத்து மூக்கை வெட்டும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

முக்கியமாக எமக்குக் கவலையளிக்கும் ஒரு விடயந்தான் எமது மீண்டுவரும் கடன்களை அரசாங்க வருமானத்தைக் கொண்டு அடைக்க முடியாமல் இருப்பது. 2020 இல் கொண்டு வரப்பட்ட வரிக் கொள்கை அரச வருமானத்தை வெகுவாகக் குறைத்தது. பொது மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தும் தற்போதைய வாழ்க்கைச் செலவின் அபரிமிதமான அதிகரிப்பானது குறித்த வரிக் கொள்கையின் நன்மைகளை மக்களுக்குக் கிடைக்கச் செய்யாமல் ஆக்கிவிட்டது. பொருளாதார விருத்தியின்றி அரச திறைசேரி சதா காலமும் நெருக்குதலுக்கு இலக்காகி நிற்கின்றது.

இவ்வாறான நிலையில் எமது கடன்களை அடைக்கப் போதுமான வருமானங்களை எம்மால் பெறமுடியாதிருப்பதால் மாதச் சம்பளங்களைக் கூடக் வழங்க முடியுமோ என்ற நிலைக்கு நாங்கள் வந்துள்ளோம்.

ஆகவே அரசாங்கம் தொடர்ந்தும் கடன் எடுக்க வேண்டிய ஒரு நிலையிலேயே தற்போது இருக்கின்றது. நாங்கள் கடன் பொறி ஒன்றில் அகப்பட்டுள்ளோம். ஆனால் அதில் இருந்து மீள வழிதேடாமல் இப்பொழுதும் அரசியல் பேசிக் கொண்டே காலம் கடத்திவருகின்றோம்.

கெஹெலிய ரம்புக்வெல அண்மையில் ஊடகங்களுக்கு ஒரு செய்தி சொன்னார். 'அரசாங்கம் ஒரு பில்லியன் டொலர்களை கடன் அடைப்பதற்காகக் கட்டியுள்ளது என்பதில் பெருமை அடைகின்றேன்' என்றார். ஆனால் அவர் மிகுதி இருக்கும் 34 பில்லியன் (3,400 கோடி) கடன் அடைக்க வேண்டிய தொகையை எப் பொழுது கட்டப் போகின்றார் என்பது பற்றிக் கூற வில்லை.எது எவ்வாறு இருப்பினும் எமது அந்நியச் செலாவணி குறைவால் சில நிறுவனங்களால் கடன் கடிதங்கள் திறக்க முடியாது என்று கூறப்பட்டதாக அறிய நேரிட்டது.

எமது அந்நிய செலாவணி அந்த அளவுக்குக் குறைந்துள்ளது அல்லவா? இப்படியே போனால் எம்மால் பெற்றோலையும் டீசலையும் இறக்குமதி செய்யக்கூட முடியாமல் போய்விடும். முன்னொரு காலத்தில் கலாநிதி தகநாயகா பெற்றோல் விலையைக் கூட்டியமையால் மாட்டு வண்டியில் நாடாளுமன்றம் வந்தார். ஆனால் தற்போதைய நிலை அதிலும் மிக மோசமானது. கையில் பணம் இருந்தால் கூட வாங்குவதற்குப் பெற்றோலோ டீசலோ இருக்காது.

முன்னெப்பொழுதும் இல்லாத அளவு நாளுக்கு நாள் - வாரத்துக்கு வாரம் - மாதத்துக்கு மாதம் நாம் கடதாசி பணத் தாள்களை அச்சிட்டு வந்துள்ளோம். செயற்கை முறைகளால், சட்டத்துக்கு அமைவற்ற முறைகளால் நாங்கள் எமது நாணயப் பெறுமதியை ஏற்றி வைத்துக் கொண்டு இருக்கின்றோம். எமக்கு என்ன நடக்கப் போகின்றது என்பது சுவரில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் நாங்கள் அதைப் படிக்காமல் அரசியல் பேசிக் கொண்டிருக்கின்றோம். பாதிக்கப்பட்ட மக்களின் நலனை நினைக்காது நாம் கண்டபடி செயற்பட்டு வருகின்றோம். எமது நாட்டு மக்களை நாங்கள் எங்கு கொண்டு வந்துள்ளோம் ? பட்டினி, கடன், மன உளைச்சல் என்ற நெருப்பு எமது மக்களைத் தாக்கும் நிலையிலும் நாம் நீரோ மன்னர் பிடில் வாசித்தது போல் நடந்து கொண்டு செல்கின்றோம்.

எங்களுக்கு சேதன உரமே தேவை என்று கூறி நாம் அசேதன உர இறக்குமதியை நிறுத்திக்கொண்டோம். உயரிய சிந்தனை தான் இது. ஆனால் அவ்வாறான ஒரு காரியம் மக்களை இரசாயன உரங்களில் இருந்து பாதுகாக்கவல்ல எடுக்கப்பட்டது. எமது டொலர்களைச் சேமிக்கவே குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் வழமைபோல் அதற்கான காரணம் தேசப்பற்றின் வெளிப்பாடே என்று கூறப்பட்டது.

இவ்வாறு உர இறக்குமதியைத் தடை செய்ய முன் விஞ்ஞான ரீதியாக அதன் தாக்கம் ஆராய்ந்து அறியப்பட்டதா? அப்படி எனில் எந்த நிறுவனம் அதற்கான சிபார்சை அரசாங்கத்துக்கு வலியுறுத்தியது? இடைக் காலம் எதனையும் கொடுக்காது திடீர் என்று இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட எந்த அரச நிறுவனம் அறிவுரை வழங்கியது? இது பற்றிய ஆராய்வுகள் நடைபெற்றனவா? உர இறக்குமதியை உடனே இயற்றினால் எவ்வாறான தாக்கம் எமது பயிர்களின் விளைச்சலில், அறுவடையில் ஏற்படும் என்ற திட்ட அலசல் செய்யப்பட்டதா?

ஆனால் அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து நெல்லை இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளதாக நாங்கள் அறிகின்றோம். அந்த நாடுகளில் இதே இரசாயன உரம் பாவித்தே பயிர்ச் செய்கை நடைபெறுகின்றது. அப்படியானால் உர இறக்குமதியின் காரணம் மக்கள் நலன் அல்ல டொலர்களின் போதமையே என்று புலப்படுகின்றது.

எனினும் இயற்கை உரத்தை எமது பயிர் உற்பத்தியாளர்கள் தொடர்ந்து பெற எத்தகைய முன்னேற்பாடுகளை அரசாங்கம் செய்துள்ளது? இதுவரை காலமும் செயற்கை உரத்துக்குப் பழக்கப்பட்ட நிலங்கள் இயற்கை உரத்தை ஏற்று போதிய பலன் தர மூன்று அல்லது நான்கு வருடங்கள் ஆகுமல்லவா? அப்படியானால் எமது விளைச்சலில் பாரிய வீழ்ச்சியை நாம் எதிர்பார்க்கலாம் அல்லவா? அவ்வாறானால் இவற்றின் உண்மைகளை அரசாங்கம் மக்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளதா? வரலாற்றின் இவ்வாறான ஒரு இக்கட்டான நிலையில் கூட நாங்கள் அரசியல் பேசிக் கொண்டு காலத்தைக் கடத்துவதன் மர்மமென்ன?

வடமாகாணத்தை எடுத்தோமானால் அசேதன உர இறக்குமதி தடை செய்யப்பட்டமை நீண்ட காலப் பாதிப்பை எமது மாகாணப் பொருளாதாரத்துக்கு ஏற்படுத்தப் போகின்றது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. ஏற்கனவே எமது மாகாண உள்நாட்டு மொத்த உற்பத்தி 2019 இல் 4.7 சதவீதமாக இருந்தது. போரின் பின்னர் பாரிய பாதிப்பை எம் மக்கள் சந்தித்து வரும் வேளையில் இவ்வாறான இறக்குமதித் தடை பாரிய விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது.

அது மட்டுமல்ல. போரின் பின்னர் தொடர்ந்து படையினர் வடமாகாணத்தில் முகாம் கொண்டு இயங்குவதால் எமது விவசாய நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளை மேலும் நட்டத்துக்குள் ஆழ்த்தும் விதமாக படையினர் வடக்கு கிழக்கில் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். தமக்கு அரசால் வழங்கப்படும் பல உதவிகளால் - சகாயங்களால் - மானியங்களால் படையினர் பயிர்களை குறைந்த செலவில் உற்பத்தி செய்யக் கூடியதாக உள்ளது.

ஆனால் விவசாயி அப்படி அல்ல. பல சிக்கல்களின் நடுவே விளைச்சல் உண்டு பண்ணுகின்றார்கள். அதன் பின்னரும் அவர்களுக்கு சந்தைப்படுத்தலில் பாரிய குறைபாடுகள் உள்ளன. எமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தப் போதுமான திட்டமிடுதல் இதுவரை நடைபெற்றதாகத் தெரியவில்லை.

புதிய விவசாய அமைச்சர் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து எமது விவசாயிகளின் விளை பொருள்களை உரியவாறு சந்தைப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எமது வடமாகாண பொருளாதாரம் ஒரு வித தேங்கு நிலையில் உள்ளது. தமிழ் மொழி தெரிந்த அமைச்சர் அளுத்கமகே விரைவில் எமது விவசாயிகளின் நிலையை மேன்மையுறச் செய்வார் என்று நம்புகின்றேன்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இரு தரப்பு சிங்கள நண்பர்களிடமும் ஒரு வேண்டுகோளை பல தடவைகள் நான் முன்வைத்து வந்துள்ளேன். அதாவது தமிழ் மக்களை உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக்கி எமது புலம் பெயர் மக்களின் முதலீடுகளுக்கு வழி அமையுங்கள் என்று கேட்டுள்ளேன். வெளிநாட்டில் இருக்கும் சிங்கள உறவுகளையும் உள்ளடக்கிய எமது புலம் பெயர் உறவுகள் எம்மால் வேண்டப்படின் கட்டாயமாக அந்நியசெலாவணியைப் போதியவாறு எமது உள்நாட்டு முதலீடுகளில் ஈடுபடுத்த முன்வருவார்கள். இவ்வாறான செயற்பாட்டால் எமது தற்போதைய பொருளாதார சிக்கல் நிலையை நாங்கள் போக்கிக் கொள்ளலாம். ஆனால் எங்கள் சிங்கள அரசியல்வாதிகள் விட்டில் பூச்சிகளைப் போன்றவர்கள். எரியும் நெருப்பைத் தேடிப் போய்த் தம்மை எரித்துக்கொள்ளும் சுபாவம் உடையவர்கள். அவர்கள் சீனர்களை நம்புவார்கள் ஆனால் தமிழர்களை நம்பமாட்டார்கள்.

மீண்டும் ஒரு முறை எமது சிங்கள பௌத்த அறிவுசால் சமூகத்திடம் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். தமிழர்களையும் முஸ்லிம்களையும் உங்கள் அந்தரங்கத்திற்குள் ஏற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்து போதிய முதலீடுகளை நாட்டுக்குள் வரவழையுங்கள். இதன் மூலமாக எமது அந்நியச் செலாவணிப் பிரச்சினைகளை நாங்கள் விரைவில் தீர்த்துக் கொள்வோம். இந்த நாட்டைக் காப்பாற்ற நாம் யாவரும் இணைய வேண்டிய முக்கிய தருணம் இது தான் - என்று தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## தடுப்பூசி அட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் தற்போது கொரோனாத் தொற்று நிலைமையானது சற்று தீவிரம் பெற்றுக் காணப்படுகின்றது. நேற்றைய பரிசோதனையின்போது 75 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

137 கொரோனா இறப்புகள் இன்று (நேற்று) வரை யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. அந்தவகையில் 2 ஆயிரத்து 445 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 969 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

வேலணை, பருத்தித்துறை பிரதேசத்தில் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இந்த நிலைமையில் மிகவும் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

தற்போது ஆலய வழிபாடுகள் ஊடாக மக்கள் ஒன்று சேர்வது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, மக்கள் சுகாதாரக் கட்டுப்பாடுகளை மதித்து தங்களுடைய குடும்பத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல் ஆலய நிர்வாகிகளும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தற்போதைய நிலைமையில் 100 பேருக்கு உட்பட்டவர்களின் பங்குபற்றுதலோடு உள்வீதி வலம் வர மாத்திரமே ஆலயங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை மதித்து நடந்துகொள்ள வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையானது திறமையாகச் செயற்படுத்தப்படுகின்றது. முதற்கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையானது எதிர்வரும் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முதற்கட்டமாக தடுப்பூசியை 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் யாழ். மாவட்டத்தில் வழங்கி வருகின்றோம்.

அதேநேரத்தில் தொழில் துறையில் ஈடுபாடு கொண்ட சகலருக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது. யாரேனும் அவ்வாறு தொழிலில் ஈடுபடுவோர் தடுப்பூசி பெறாவிட்டால் அண்மையில் உள்ள பிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு அந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசியை 30 வயதுக்கு மேற்பட்டோர் எடுப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அது தேவையானதொன்று. இது சட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட விட்டாலும் சமூகத்தினுடைய பாதுகாப்பு கருதி அது கட்டாய தேவையாகக் கருதப்படுகின்றது.

இனிமேல் சில அரச திணைக்களங்கள் அதேபோல் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய பொது இடங்கள், சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பொதுச் சந்தைகளிலும், பஸ்களில் பயணிப்பதற்கும் கூட தடுப்பூசி அட்டையைக் காண்பித்துத்தான் யாழ். மாவட்டத்தில் பயணிக்க முடியும்.

எனவே, தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டு அதற்கு அடையாளமாக விளங்குகின்ற அட்டையைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

எதிர்வரும் 9ஆம் திகதி 10 ஆம் திகதிகளில் இரண்டாவது டோஸ் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. அதாவது முதற்கட்டமாக ஆரம்பகட்டத்தில் முதலாவது தடுப்பூசி பெற்றோருக்கான இரண்டாவது டோஸ் தடுப்பூசி வழங்கும் திட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே, முதலாவது டோஸ் பெற்றோர் தமக்குரிய இரண்டாவது டோஸை அந்தந்த தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று பெற முடியும்.

வயது முதிர்ந்து நடமாட முடியாது வீடுகளிலே தங்கியிருப்போரின் வீடுகளுக்குச்சென்று அவர்களுக்குரிய தடுப்பூசியை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு இருப்பவர்கள் தங்களுக்குரிய விவரங்களை அந்தந்தப் பிரதேச செயலர் மற்றும் பொது வைத்திய அதிகாரிகளுக்கு அறிவிப்பதன் மூலம் தங்களுக்கு உரிய ஊசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசி அட்டையைப் பெற்றுக்கொள்வதோடு தடுப்பூசியை அட்டையைத் தங்களுடன் வைத்துக்கொள்வது சகல பொதுமக்களின் கடமையாகும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது அனைத்து சமூகத்தையும் பாதுகாப்பதற்குரிய ஒரு செயற்பாடாக அமையும்.

யாழில் டெல்டா வைரஸ் பரவக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, பொது மக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

# சுனாமியாக தாக்கப் போகும் சுகாதார நெருக்கடி; இலங்கையில் பேரழிவு ஏற்படும் என எச்சரிக்கை

ஆபத்தான டெல்டா திரிபு வைரஸ் கட்டுப்பாட்டை மீறி இலங்கையில் பரவும் அபாயம் உள்ளது என எச்சரித்துள்ள சுகாதார நிபுணர்கள், வரும் வாரங்களில் இலங்கை மிக மோசமான சுகாதார சுனாமியை எதிர்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாணம் முழுவதும் உள்ள மருத்துவமனைகள் அவற்றின் உச்சபட்ச பாராமரிப்பு திறன் விளிம்பில் உள்ளன. தற்போது மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் தொற்று நோயாளிகளில் மூன்றில் இருவர் தீவிர சுவாசப் கோளாறால் பாதிக்கப்பட்டு ஒக்ஸிஜன் தேவைப் படுவோராக உள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை கொரோனா கிசிச்சை பிரிவுகள் முழுமையாக நிரம்பிவிட்டன. நேற்றுக் காலை நிலவரப்படி 610 கொரோனா தொற்று நோயாளிகள் தேசிய மருத்துவமனையில் இருந்தனர்.

ஆரம்பத்தில் ஒரு சிகிச்சை விடுதியில் 4 படுக்கைகள் ஒக்சிசன் வசதி கொண்டவையாக அமைக்கப்பட்டிருந்தன. தொடர்ந்து பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு ஒக்சிசன் தேவை அதிகரித்ததை அடுத்து ஒவ்வொரு விடுதியிலும் இவை மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டு 12 கட்டில்கள் ஒக்சிசன் வசதி கொண்டவையாக மாற்றப்பட்டன. இந்நிலையில் சமீபத்திய வாரங்களில் நோயாளிகள் தொகை தொடர்ந்து அதிகரிப்பதால் ஒக்சிசன் படுக்கைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

தேவைப்படும் அனைத்து நோயாளிகளுக்கு ஒக்ஸிஜன் கொடுக்க நாங்கள் போராடி வருகிறோம். நாங்கள் ஒக்ஸிஜன் படுக்கைகளுடன் தயாராக இருந்தோம். எனினும் திடீரென நோயாளிகள் தொகை இவ்வாறு அதிகரிக்கும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இது கற்பனைக்கு அப்பாற்பட்ட தீவிர நிலையாக உள்ளது என தொற்று நோய்க்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் இருக்கும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

அடுத்துவரும் வாரங்களில் ஒக்சிசன் தேவைப்படும் நோயாளிகள் தொகை மேலும் அதிகரிக்கும். அவர்கள் அனைவருக்கும் ஒக்ஸிஜனை வழங்க முடியாது எனக் கருதுகிறேன் என முன்னணியில் இருக்கும் மற்றொரு மருத்துவர் கூறியுள்ளார்.

தற்போது சிகிச்சைக்கு வரும் பொரும்பாலானோர் டெல்டா திரிபால் பாதிக்கப்பட்டவர்கள் என்றே நாங்கள் சந்தேகிக்கிறோம். இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் ஒரு மாதத்தில் இலங்கை பேரழிவுகளைச் சந்திக்கும் என்று சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இலங்கை வரலாற்றில் மிக மோசமான சுகாதார பேரழிவு மலேரியா தொற்று நோயால் ஏற்பட்டது. 1934 - 1935 காலப் பகுதியில் மலேரியாவால் சுமார் 80 ஆயிரம் மக்கள் உயிரிழந்தனர். அந்த நேரத்தில் இலங்கையில் 20 பேரில் ஒருவர் மலேரியாவால் இறந்தார். தற்போது டெல்டா உலகெங்கும் பேரழிவை ஏற்படுத்தி வருவதால் இலங்கை 1934 - 1935 காலப்பகுதியில் எதிர்கொண்டதை விட மோசமான பேரழிவுகளை எதிர்கொள்ள நேரிடலாம் என மருத்துவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

## அதிபர்கள், ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றும் அதனால் எதற்கும் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் பக்க பலமாக தாம் இருப்போம் என்றும் அச்சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கம் யாழ் ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்பொழுது கல்வியமைச்சு வெளியிட்ட சுற்றுநிருபத்தை வைத்துக் கொண்டு ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு வரவழைக்கும் முயற்சியில் கல்வி திணைக்களம் மற்றும் அதிபர்கள் சிலரும் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

உண்மையில் இந்த விடயத்தில் தேவையில்லாமல் எந்த விதமான அச்சமும் ஆசிரியர்கள் கொள்ளத் தேவையில்லை. இதனை அனைத்து அதிபர், ஆசிரியர்களும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

ஏனெனில் முதலாவதாக அதிபர், ஆசிரியர்கள் தற்போது தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர். அடுத்து அண்மையில் வெளிவந்த சுற்றுநிருபத்திலும் அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை.

ஆகையினால் அதிபர்,ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டுமென்றோ அல்லது கையெழுத்திட வேண்டுமென்றோ எந்த அவசியமும் இல்லை. எனவே தேவையில்லாமல் இந்த விடயத்தில் அதிபர், ஆசிரியர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

மேலும் அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டிருப்பதால் பாடசாலைகளுக்கு செல்லாமலே இருக்கலாம். அதற்கு லீவு கூட கொடுக்கத் தேவையில்லை.

குறிப்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட 16 சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதால் உங்களுடைய தொழிற் பாதுகாப்பு தொடர்பில் எமது சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் அதற்கான பொறுப்பை எடுத்துக் கொள்கின்றன.

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுகின்ற அதிபர் ஆசிரியர்களின் தொழிற் பாதுகாப்பிற்கு நாம் என்றும் பக்க பலமாக இருப்போம். ஆகையினால் அதிபர்,ஆசிரியர்கள் எதற்கும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

எனவே நாடு முழுவதும் அதிபர் ஆசிரியர்கள் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டு வருகையில் ஒரு சிலர் பாடசாலைகளுக்குச் சென்று போராட்டத்தை திசை திருப்புகின்ற வேலையைச் செய்யாதீர்கள்.

அது மட்டும் இல்லாமல் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டுமென்று அறிவித்தல் இல்லாமலும் மாணவர்களும் பாடசாலைகளுக்கு சமுகமளிக்காத நிலையிலும் ஆசிரியர்கள் மட்டும் பாடசாலைகளுக்கும் சென்று இலையான் கலைக்க வேண்டிய அவசியமும் இல்லை.

எனவே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொழிற்சங்க போராட்டத்தில் அனைத்து அதிபர் ஆசிரியர்களும் எந்த வித அச்சமுமின்றி தொடர்ந்தும் போராட்டத்திற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனக் கோருகின்றோம். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் 84 பேர் உட்பட வடக்கில் நேற்று 130 பேருக்குத் தொற்று

வடக்கு மாகாணத்தில் நேற்று 130 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடம், யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய யாழ்.மாவட்டத்தில் 84 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 82 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 727ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று தோன்றிய இடமாகக் கூறப்படும் சீனாவில் இதுவரையில் தொற்றால் 4 ஆயிரத்து 636 பேர் உயிரிழந்துள்ளனர் என வேர்ல்டோமீற்றர் இணையதளம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, மொத்தக் கொரோனா சாவுகளின் எண்ணிக்கையில் சீனாவை இலங்கை விஞ்சியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

## நல்லூர் திருவிழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆலய உட்பிரகாரத்தில் மாத்திரம் திருவிழா நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த வருட ஆலய உற்சவத்தைத் திறம்படச் செயற்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார்

## ஆசிரியர்கள் திங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம் யாழ் ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அச்சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அண்மைக்காலமாக ஆசிரியர்கள், அதிபர்களுடைய சம்பள முரண்பாடு தொடர்பாகவும், நாட்டில் இலவசக் கல்வியை இல்லாதொழிக்கும் கொத்தலாவல சட்ட மூலத்திற்கு எதிராகவும் அதிபர், ஆசிரியர்கள் நாடு முழுவதும் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலும் மாபெரும் தொடர் வாகனப் பேரணியொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். அதற்கமைய எதிர்வரும் திங்கட்கிழமை யாழ் வீரசிங்கம் மண்டபம் முன்பாக இந்த வாகனப் பேரணி ஆரம்பிக்கப்பட்டு யாழ் மாவட்டச் செயலகம் வரை சென்று நிறைவடைய உள்ளது.

ஆகையினால் வடக்கு மாகாணத்திலுள்ள அதிபர்களும் ஆசிரியர்களும் இந்த பேரணிக்கு முழுமையான ஆதரவை வழங்கி பேரணியில் கலந்து கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கின்றோம். - என்றார்

காலைக்கதிர் Kalaikkathir

# முன்னிலை சோசலிசக் கட்சி உறுப்பினர்கள் இருவர் கைது

முன்னிலை சோசலிசக் கட்சியின் நிர்வாக செயலாளர் சமீர கொஸ்வத்தவும், கட்சியின் மேலும் ஓர் உறுப்பினரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை தாக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து; நட்டஈட்டுக்கு 42கோடி ரூபா ஒதுக்கீடு



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளானதில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்காக இதுவரையில் 42கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய கம்பஹா, கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா இழப்பீடு தற்போது வழங்கப்பட்டு வருவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீக்குள்ளானதால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்கு முறையான மற்றும் ஒழுங்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.




# மகரகம பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்து வைத்தியசாலையில்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது ஏற்பட்ட விபத்தால் காயமடைந்த மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

போராட்டக்காரர்கள் பொலிஸாரின் தடை உத்தரவினை மீறி முன்னேற முயன்றபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் இரு விரல்களும் முற்றிலுமாக காயங்களுக்குள்ளாகியுள்ளன.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பாக சிறப்பு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது

இராஜகிரிய ஆயுர்வேத சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

சுதந்திர கல்வியை பாதிக்கும், கல்வியை இராணுவமயப்படுத்தும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் உடன் நீக்கப்பட வேண்டும். - என்ற தொனிப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் பேரணியாக நாடாளுமன்ற சுற்று வட்டாரத்தை அடைந்தனர்.

நாடாளுமன்ற சுற்று வட்டத்தை அடைந்து அங்கு நீண்ட நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைய முற்பட்டபோது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் தடுக்கப்பட்டனர்.

எனினும் பொலிஸாரை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைய முற்பட்டமையால் அங்கு அமைதியற்ற நிலை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் நீண்ட நேரம் எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதேவேளை, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் புகைப்படங்களை ஒத்த முகமூடிகளையும் இட்டு சவப்பெட்டியொன்றையும் எரித்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

## கிளிநொச்சியில் விபத்து அருட்தந்தை படுகாயம்

கிளிநொச்சி – பளை புதுக்காட்டு சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று (புதன்கிழமை) காலை முல்லைத்தீவு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த அருட்தந்தை கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தனிமைப்படுத்தல் மீறிய குற்றம் 53 ஆயிரத்து 143 பேர் கைது!

நாட்டில் நேற்று (புதன்கிழமை) காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 113 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, நாட்டில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 143 ஆக அதிகரித்துள்ளது.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைப் பேணாமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 24 மணிநேரமும் மூடிய அறைக்குள் என்னை அடைத்து வைத்துள்ளனர்

## ரிஷாத் நாடாளுமன்றில் தெரிவிப்பு



24 மணிநேரமும் மூடிய அறைக்குள் அடைத்து வைத்து மலசலகூடத்துக்கு மட்டும் வெளியில் செல்ல அனுமதிப்பதாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் 102 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

ஜனாதிபதியும் பிரதமரும் இந்தச் சபையில் இருக்கின்றார்கள்.

என்னை கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி கைது செய்தார்கள். வெறும் 5 நாள்கள் மாத்திரமே என்னை விசாரணை செய்தார்கள். 102 நாள்கள் என்னைத் தடுத்துவைத்துள்ளார்கள். 97 நாள்கள் வரையில் அறையில் அடைத்து வைத்துள்ளார்கள். 24 மணி நேரமும் அந்த அறை மூடப்பட்டு, மலசலகூடத்துக்கு மட்டும் என்னை வெளியில் செல்ல அனுமதிக்கிறார்கள்.

இன்றுவரை எந்தவிதமான விசாரணைகளும் இடம்பெறவில்லை. நான் பொய் கூறவில்லை. வேண்டுமென்றால் வந்து பார்க்க முடியும்.

ஜனாதிபதி அவர்களே, இன்னுமொரு விடயம். என்னைக் கைது செய்தபோது, பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் 'என்னை ஏன் கைது செய்கிறீர்கள்?' என்று நான் கேட்டபோது, எனது அமைச்சில் பணிபுரிந்த மேலதிக செயலாளர் பாலசுப்பிரமணியத்துடன், ஒன்றரை நிமிடம் தொலைபேசியில் உரையாடினேன் எனக் கூறினார்கள். இதனால்தான் என்னைக் கைது செய்துள்ளோம் எனக் கூறினார்கள். வேறு எந்தக் காரணமும் இல்லை. - என அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டு டோஸ் தடுப்பூசிகளும் பெற்றவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குள் நுழையலாம்

இலங்கை, உள்ளிட்ட ஆறு நாடுகளில் இருந்து வரும் வரும் விமானப் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை இன்று (வியாழக்கிழமை) முதல் நீக்குவதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக்கொண்ட ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்தவர்கள் நாடு திரும்பலாம் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அதன்படி, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், நைஜீரியா மற்றும் உகண்டாவிலிருந்து வரும் பயணிகளுக்கு இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கொரோனாவுக்கு எதிராக முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட மற்றும் செல்லுபடியாகும் ஐக்கிய அரபு இராச்சிய வதிவிட அனுமதி வைத்திருக்கும் பயணிகள் இன்று முதல் ஐக்கிய அரபு அமீரகத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

இரண்டாவது தடுப்பூசி அளவைப் பெற்ற பிறகு குறைந்தது 14 நாள்கள் கடந்திருக்க வேண்டும். இதற்காக அவர்கள் சான்றிதழும் வைத்திருக்க வேண்டும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2021 இல் வெளியிடப்பெற்றது.